மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

TANJORE BOOKS MART
DEALERS IN OLD BOOKS & MAGAZINES.
15-E, PONNAMBALA VATHIAR ST,
NEAR KAPALI TEMPLE, MYLAPORE.

3 | 1 - 7 - 54 | இதழ்

உழவர் புரட்சி!



பிரபுக்களின் கொடுங்கோன்மையை எதிர்த்துப் பிரெஞ்சு நாட்டில் 1358-ல் உழவர் புரட்சி செய்தனர். அதில் ஒரு பிரபுவின் மாளிகையின்முன் உழவர்கள் கிளர்ச்சி செய்யும் காட்சி.

[illegible]

அழகிரியின் இறுதி நாட்கள்

அஞ்சாநெஞ்சன் என்று உச்சரித்தால், உடனே ஒவ்வொருவர் [illegible] காட்டப்பட்ட கே. வி. அழகிரிசாமி அவர் [illegible] தோற்றமும், எழுச்சியான பேச்சும் முன் வந்து நிற்கும். பகுத்தறிவு இயக்கத்துக்குக் கோட்டை எழுப்பிய வீரர்களிலே முக்கியமானவராகவும், முதன்மையானவராகவும் வைத்துப் போற்றப்படத்தகுந்த பெற்றிவாய்ந்தவர் அவர் எனில், அது மிகை யாகாது,

மாற்றாரின் வாய்ப்பேச்சோ, வாள் வலியோ, பணவலியோ, படைவலியோ அவரை அவரது வாழ்நாட்களில் வீழ்த்த முடிந்ததில்லை; ஆனால் விஷப்பூச்சிகள் அவரது உடலுக்குள் வஞ்சகமாக நுழைந்து இறுதியில் அவரை வீழ்த்திவிட்டன. க்ஷயரோகக் கிருமிகள் அவரை வாட்டி வதைத்துவிட்டன. வெற்றிப் புன்னகை யோடு கவலையற்று நாடெங்கும் உலாவிவந்த அவர், இறுதி நாட்களில் நோய்வாய்ப் பட்டு இரங்கத்தக்க நிலையில் துன்பத்தில் உழன்றார்.

அவர் சென்னை தாம்பரத்திற்கு அடுத்துள்ள சந்தோஷபுரத்தில் உள்ள சானிடோரியத்தில் நோயாற்றிக்கொள்ள வந்தார். அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் அழகிரிசாமியின் உடல்நிலையைக் கண்டுவர ஒருநாள் மாலை சென்றார். அழகிரிசாமியின் வீரத்தோற்ற நினைவோடு சென்ற அண்ணா, விஷக்கிருமிகளுக்கு இரையான உடலின் தோற்றத்தைக் கண்டு கண்கலங்கினார். அழகிரிசாமி, குற்றுயி ரும் குறையுயிருமாக இருக்கும் தன்னை வறுமை மிக விரைவிலே கொன்றுபோடும் போலிருக்கிறது என்ற கருத்தை இருமல் இடை இடையே வர சிலசில சொற்களால் தெரிவித்தார். அண்ணாவால் நீண்டநேரம் இருந்து அவரது துன்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்க காளமுடியவில்லை. நோய் தீராதமுறையில் அழகிரிசாமி அன்று இரவே தஞ்சைக்குப் புறப்படுகிறார் என்பதை அறிந்துகொண்ட அண்ணா ஏதேனும் பொருளுதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் விரைந்து வெளியேறினார்கள்.

அண்ணா அவர்கள் முன்பு 'சந்திரோதயம்' நாடகம் நடத்திய விதத்தில், மிச்ச தொகை சுமார் ரூபாய் எழுநூறு தோழர் டி. சண்முகம் அவர்களிடத்தில் கொடுத்துவைத்திருந்தார். அதை வாங்கித் தோழர் மதியழகன் அவர்களிடம் கொடுத்தார். தோழர் மதியழகன் அதனை வாங்கிக்கொண்டு விரைந்து சென்று, தாம்பரம் நிலையத்தில் புகைவண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டிருந்த தோழர் அழகிரிசாமியிடம் கொடுத்தார். அந்த ரூபாய் அவரது நோயைப் போக்கத் துணை யாக இல்லாவிட்டாலும், அழகிரிசாமிக்குச் சிறிது மன ஆறுதல் அளிக்கத் துணையாக இருந்தது.

மேலும் அண்ணா அவர்கள் அப்பொழுது கூட்டம் ஒன்றுக்கு ரூ. 100 தோழர் அழகிரிசாமிக்கு நிதியாக அளித்துவிட்டு, இரசீதைக் காட்டினால்தான், கூட்டத்திற்குத் தாம் வர இயலும் என்று நிபந்தனை போட்டார்கள். அந்தவகையில் சில நூறு ரூபாய்கள் தோழர் அழகிரிசாமிக்கு இறுதிநாட்களில் உதவிசெய்தன.

தோழர் அழகிரிசாமி மறைந்த பிறகு, அவரது குடும்பம் அல்லற்படக் கூடாது என்று அறிஞர் அண்ணா, என். எஸ். கே., டி. பி. பொன்னுச்சாமி ஆகியோ ரின் இடைவிடா முயற்சியால், நிதியொன்று சேர்க்கப்பட்டுக், கடனில் மூழ்கியிருந்த சொத்துக்கள் மீட்கப்பட்டுக் குடும்பத்திற்குக் கொடுக்கப்பட்டன. தோழர் சௌந் தரபாண்டியன், பி. டி. இராசன் ஆகியோரின் உதவியாலும் அழகிரிசாமியின் சொத் துக்கள் சிறிதளவு மீட்கப்பட்டன.

அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியின் இறுதி நாட்களில் நோய் அவரை வாட் டினாலும், மனம் வாடாதவாறு சிறிதளவு ஆறுதல் அளிக்கும் பொறுப்பை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அது அழகிரிசாமிக்குச் சிறிதளவு மகிழ்ச்சியைத் தந்தது.

131

மன்றம்

1 - 7 - 54 வியாழக்கிழமை

டில்லி விட்ட வழி

இந்தியத் துணைக்கண்டத்தில் மிக முக்கியமான அரசாங்க வரிகளாக இருப்பவை வருமானவரி, ஏற்றுமதி இறக்குமதிவரி, கலால்வரி முதலியவைகளாகும். இந்த வரிகளெல்லாம் ஒவ்வொரு மாநிலத்திலும் வசூலிக்கப்பட்டபோதிலும், வசூலிக்கப்பட்ட வரியனைத்தும் மத்திய அரசாங்கத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது. ஒரு அரசாங்கத்துக்குக் கிடைக்கக்கூடிய முக்கிய வருமான வழிகளாக இருந்தபோதிலும், இந்திய அரசியல் சட்டப்படி டில்லி அரசாங்கத்துக்கே அந்த உரிமைகளனைத்தும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாகச் சென்னையில் ஒருவர் வருமானவரி ஆயிரம் ரூபாய் செலுத்துகிறாரென்றால், அது இங்கு சென்னையிலுள்ள கனம் சுப்பிரமணியம் கஜானாவுக்குப் போய்ச் சேராது, டில்லியிலுள்ள கனம் தேஷ்முக் பணப்பெட்டிக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது. வருமானம் ஏற்பட்டது சென்னையில்; அந்த வருமானத்தை உண்டாக்கியவர் இருப்பது சென்னையில்; ஆனால் அவர் செலுத்துகிற வருமானவரி மட்டும் டில்லிக்குச் சென்றுவிடுகிறது. கோடிக்கணக்கில் இவ்வாறு வரிப்பணம் டில்லிக்குச் சென்றுவிடுகிறது. பின் டில்லி சர்க்கார் பார்த்துக், கொடுக்கப்படும் பணமே சென்னை அரசாங்கத்துக்குக் கிடைக்கும்.

அதேபோல் சென்னைத் துறைமுகத்தில் ஒரு சாமான் வந்து இறங்குகிறது என்றாலோ, அல்லது ஒரு தோல் கட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றாலோ அதற்கு விதிக்கப்படும் வரியனைத்தும் டில்லி அரசாங்கத்துக்குச் சேர்ந்துவிடுகிறது.

திருச்சியில் சுருட்டுத் தயாராகிறதென்றால், அதற்கு விதிக்கப்படும் வரி டில்லிக்குப் போய்ச் சேர்கிறது.

சாத்தூரில் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வசூலிக்கப்படும் வரிப்பணம், நேராக டில்லி அரசாங்கத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது.

இவற்றையல்லாமல், ரயில்வே வருமானம் டில்லிக்குப் போய்ச் சேர்கிறது.

தந்தி தபால் வருமானங்கள் டில்லிக்குப் போய்விடுகின்றன.

இந்த வரி, வருமான வகைகளெல்லாம் டில்லி மத்திய அரசாங்கத்துக்குச் சேர்ந்துவிட, மாநில அரசாங்கங்கள் தங்களுடைய வருமானத்துக்குவழியில்லாமல் திண்டாடவேண்டியிருக்கிறது. ஏதாவது தேவையென்றால், டில்லிக்குக் காவடி தூக்கி, நேரு பண்டிதர் சந்நிதானத்தில் ஆட்டமாடி, தேஷ்முக் அர்ச்சகரிடம் பாட்டுப்பாடி, வரங்கேட்க வேண்டியிருக்கிறது.

இங்கிருக்கிற வரிப்பணத்தை டில்லி ஆதிக்க பீடத்தின்முன் செலுத்திவிட்டுப், பின் அங்கு கெஞ்சிக் கூத்தாடிப் பங்கு கேட்கவேண்டியிருக்கிறது.

திராவிடத்தின் வளங்கள், அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம், அவற்றின்மீது விதிக்கப்படும் வரி, இவையனைத்தும் டில்லி ஆதிக்கத்தின்கீழ் இருக்கிறது. இந்த நாட்டிலிருந்து டில்லிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற பணம், வடநாட்டுத் தொழில்வளங்களைப் பெருக்க, தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டங்களை உருவாக்க, சிந்திரி சித்தரஞ்சன் தொழிற்சாலைகளைக் கட்டி முடிக்க, டால்மியா பிர்லா டாடா முதலியவர்களுக்கு உதவியளிக்க, பயன்படுகிறது. திராவிடத்தின் வளங்கள் கவனிக்கப்படாமல் பாழடிக்கப்படுகின்றன. உதவி கேட்டால் இல்லையென்ற கைவிரிப்புதான் வருகிறது.

வரிப்பணத்தை வாங்கி அவர்கள் செலவு செய்கிறார்கள்! வாயில் விரலை வைத்துக் கொண்டு பார்த்தவண்ணம் நமது மந்திரிகள் நிற்கின்றனர்!

ஏன் இந்த இழி நிலை!

வரிப்பணத்தை வசூல்செய்து டில்லிக்கு அனுப்புவானேன்? பின் அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி நிற்பானேன்?

பணம் தருவது நாம்தான், பின் பல்லிளித்து நிற்கவேண்டியதும் நாம்தானா?

இந்திய அரசியல் சட்டத்தின்படி, அரசியல் பொருளாதார பலமனைத்தும் மத்திய அரசாங்கத்துக்குச் சேர்க்கப்பட்டுவிட்டன. அந்தத் திட்டப்படி, டில்லி ஆதிபத்தியத்தின் எடுபிடி ஆளாக, திராவிடமும், அதைப் போன்றே மற்ற மாநில அரசுகளும் ஆகிவிட்டன. முக்கிய வருமானவகைகளெல்லாம் டில்லி ஆதிக்கத்தின் கையில் இருப்பதால், ஏதாவது உருப்படியாக ஒரு திட்டத்தை நிறைவேற்ற நினைத்தாலும் மாநில அரசுகளால் முடியாது.

உதாரணமாக நெய்வேலியில் நிலக்கரி கிடைப்பதாகத் தெரிகிறதென்றால், அவ்வாறு "நிலக்கரி இருக்கிறது, இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டு சென்னை அரசாங்கம் இருக்கலாமேயன்றி, உடனே நிலக்கரியைத் தோண்டியெடுத்து, பயன்படுத்தக்கூடிய திட்டத்தைச் சென்னை அரசாங்கத்தால்உண்டாக்க முடியவில்லை. டில்லி அரசாங்கத்துக்கு மனுப் போடவேண்டியிருக்கிறது. காரணம், இவர்களிடம் அதற்கான பணவசதி கிடையாது. இங்கிருந்து கிடைக்கும் முக்கிய வரிகளைத் தான் டில்லிக்கு அனுப்பிவிடுகிறார்களே! அதனால்தான் ஏதாவது முக்கியமான திட்டங்களென்றால், இங்கிருக்கும் அரசாங்கத்தால் முடிவதில்லை, டில்லி பார்த்துதான் செய்ய வேண்டும். டில்லியின் கண்களுக்குப் பக்கத்திலிருக்கும் காஷ்மீரும், நேபாளும், பஞ்சாபும், பீகாரும் தெரிகிறதேயன்றி, திராவிடத்தின் நிலைமை தெரிவதில்லை.

கோடிக்கணக்கில் வரிப்பணத்தை டில்லிக்குக் கொட்டியளந்துவிட்டு, இங்கு நாம் கையைக் கட்டிக்கொண்டு, வயிற்றைக் கட்டிக்கொண்டு நிற்கவேண்டியிருக்கிறது.

இதை திராவிடரியக்கத்தாராகிய நாம் மட்டும் கூறவில்லை. சென்னை காங்கிரஸ் முதன் மந்திரி காமராசர்கூட ஒப்புக்கொண்டுள்ளார். வாலாஜாபேட்டை நகரசபையினர் முதன் மந்திரிக்கு அளித்த வரவேற்பில், வாலாஜா நகரம் தாழ்ந்த நிலையில் இருப்பதால், அதன் முன்னேற்றத்துக்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்களாம். அதற்குப் பதிலளிக்கையில் முதன்மந்திரி காமராஜர் "நீங்கள் எங்களைக் கடன் கேட்கிறீர்கள், நாங்கள் மத்திய அரசாங்கத்திடம் கடன்கேட்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார். மத்திய அரசாங்கத்திடம் மாநில அரசாங்கங்கள் மண்டியிட்டுக் கிடக்கும் நிலையை முதன் மந்திரி பதவி வகிக்கும் முக்கியமான காங்கிரஸ் தலைவர் ஒருவரே ஒப்புக் கொள்ளவேண்டியிருக்கிறது. சென்னை அரசாங்கம் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தால்கூட, அவர்களால் தனிப்பட்ட முறையில் முடியாது; மத்திய அரசாங்கத்தின் கடாட்சத்தைப் பெற்றுதான் ஆகவேண்டும். பொருளாதாரப் பிடி அந்த அளவுக்கு டில்லி ஆதிபத்தியத்திடம் சிக்கியிருக்கிறது.

வடநாட்டு அரசியல் ஆதிபத்தியத்தின் கீழ் நாம் இருப்பதால், வரிப்பணத்தை அங்கு கொடுத்துவிட்டு, பின்வாங்கும் வகையறியாது தவிக்கும் நிலைக்கு மற்றுமொரு உதாரணம் தருகிறோம். இந்தியாவிலேயே தீப்பெட்டித் தொழில் பெருவாரியாகப் பரவியிருப்பது இராமநாதபுர மாவட்டத்திலுள்ள சாத்தூர் சிவகாசிப் பகுதிகளாகும். அங்கு தொழிற்சாலைகளில் வேலை நடப்பதுமன்னியில், வீடு வீடாகக் குடிசைத்தொழிலாகத், தீப்பெட்டி தயாரிப்பு நடைபெறுகிறது. அந்தத் தீப்பெட்டிக்கு வரியிடும் உரிமை நமது சென்னை அரசாங்கத்துக்குக் கிடையாது. டில்லி மத்திய அரசாங்கத்திடமே இருக்கிறது. ஒரு பெட்டிக்கு 4 தம்பிடி வரி விதிக்கப்படுகிறது. அதாவது 1000 பெட்டிகள் தயாரித்தால், அதற்கு ரூ. 20—13—4 மத்திய அரசாங்கத்துக்குப் போய்விடுகிறது வரிப்பணமாக.

சாத்தூர் எல்லைக்குள் நடைபெறுகிற தொழில், அதில் ஏராளமான மக்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குப் பொதுநலங்கள், சுகாதார வசதிகள் செய்வதற்கு வேறு வழியில் அந்த ஊராட்சிமன்றத்துக்குப் பணம் கிடைக்கவில்லை. எனவே அவர்கள் மத்திய அரசாங்கத்துக்கு மனுச் செய்துகொண்டனர்; மத்திய சர்க்கார் வசூலிக்கும் தீப்பெட்டி வரியிலிருந்து தங்களுக்குப் பங்கு தரும்படி.

அவர்கள் பங்கு கேட்டது, ஆடம்பரச் செலவுகளுக்கல்ல, அநியாய வகைகளுக்கல்ல; ஊர் மக்களுக்கு நலம் செய்ய. அதிலும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு, கேட்கும் பங்கும் அந்தத்

தொழிலிலிருந்து கிடைத்த வரிப்பணத்திலி ருந்து.

சாத்தூர் பஞ்சாயத்து கேட்ட பங்கும் குறை வானதுதான்; தனது ஊரிலிருந்து மத்திய சர்க்கார் வசூலிக்கும் தீப்பெட்டி வரிப்பணத் தில் பத்தில் ஒரு பங்கு தரும்படி.

ஆனால் டில்லி மத்திய சர்க்கார் மறுத்துவிட் டனர், பங்கு எதுவும் கிடையாது என உரத்த குரலில் உத்தரவிட்டனர். பாவம், சாத்தூர் ஊராட்சி சபையால் என்ன செய்யமுடியும்? இந்தச் சிற்றூர் எங்கே? சிறிப்பாயும் அந்த டில்லி எங்கே? தள்ளப்பட்ட மனுவை வாங்கி மடித்து வைத்துக்கொண்டனர் சாத்தூர் ஊராட்சியினர்.

சாத்தூருக்குக் கிடைத்த பதிலேதான், கோவில்பட்டிக்கும், சிவகாசி ஊர்களுக்கும் கிடைத்திருக்கிறதாம்.

60 குச்சிகளைக்கொண்ட ஒரு தீப்பெட்டியை நாம் 9 தம்படி கொடுத்து வாங்குகிறோம். அங்க 9 தம்படியில் 4 தம்படி டில்லி கஜானுவுக்குச் சென்றுவிடுகிறது. அந்த நாலு தம்பிடியில் ஒரு அரைதம்பிடிக்கும் குறைவாகவே சாத்தூர் கேட்டது. முடியாது என்ற கடுமையான பதில் வந்திருக்கிறது.

இந்த நிலை ஊராட்சி நகராட்சி சபைகளுக்கு மட்டுமல்ல, மாநில அரசாங்கங்களுக்கே இருக் கிறது. வரிப்பணத்தை மூட்டைகட்டி டில் லிக்கு அனுப்பிவிட்டு, பின் பத்தில் ஒரு பங்கு தா, வரிப்பணத்தில் அரை தம்பிடி தா என்று தந்தானுபாட்டுப் பாடினல் நிச்சயமாக நமக் குக் கிடைக்காது.

ஒரு வீட்டிலே இருப்பவன் தன்னுடைய வருமானத்தை யெல்லாம் எதிர்விட்டுக்கார னிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, பின் ஒவ்வொரு நாளும் அவனிடம் போய் "உப்புக்கு ஒரு காசு தா! அரிசி வாங்க இரண்டுபணம்தா" என்று ஏன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்? எதிர்வீட்டுக்காரனே, இவன் பணத்தை வைத்துக்கொண்டு, அவன் வீட்டுத் திண்ணையைச் சரிப்படுத்தி, தோட்டத்தைப் பண்படுத்தச் செலவுசெய்து கொண்டிருக் கிறன். இந்த நிலையில்தான் திராவிடத்தி லிருந்து வரிப்பணத்தை வாரி டில்லிக்குக் கொடுத்துவிட்டு, பின் அவர்களுக்கு மனுச் செய்து பங்கு கேட்கவேண்டியிருக்கிறது, 'கிடையாது' என்று பதில் வந்தால் அதையும் கேட்டுக்கொண்டு சும்மாயிருக்கவேண்டி யிருக் கிறது. நாடெங்குமிருந்து திரட்டப்படும் பணம் வடநாட்டில் புதுத்திட்டங்கள் உருவாக, தொழிற்சாலைகள் பெருக செலவாகிவரு கிறது.

வாலாஜா பேட்டையில் தொழிற்சாலைகள் இல்லை. தொழிற்சாலை வைத்தால் வருமானம் வரும், அதனல் நகரம் வளமாகும் என்று வாலாஜா நகர சபையினர் கருதினர்கள். அதற்காக மாநில முதன் மந்திரியைக் கேட் டார்கள். "அவர் மத்திய அரசாங்கத்தைக் கேட்கவேண்டுமே!" என்று ஏக்கத்துடன் பதிலளித்துவிட்டார்.

சாத்தூர், சிவகாசி போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் இருக்கின்றன, தொழில் புரிவோர் இருக்கின்றனர். அப்படி இருந்தும் அந்த ஊர் நகராட்சி, பஞ்சாயத்து சபை களுக்கு தகுந்த வருமானம் கிடையாது. அங்கு நடக்கும் தொழில்களின்மீது கிடைக்கும் வரிப் பணம் டில்லி அரசாங்கத்துக்குப் போய்விடு கிறது.

தொழில் வளங்கள் பெருகவேண்டும், அத் துடன் அவற்ருல் வருகிற பலன் வேறிடத் துக்கு ஏற்றுமதியாகிவிடாமல் தடுக்கவேண் டும். வடநாட்டு அரசியல் பிடியில், திராவிடம் சிக்கியிருக்கிற காரணத்தால், இங்கு தொழில் வளர்ச்சியில்லை; வளர்ச்சியுறும் ஓரிரு தொழில் களும் டில்லிக்குக் காணிக்கை செலுத்திவிட்டுக் கண் கலங்கிநிற்கிறது. வடநாட்டில் உருவாவது போன்று திட்டங்களையும், தொழிற்சாலைகளை யும் நாமும் திராவிடத்தில் உண்டாக்கமுடியும், இந்த நாட்டு அரசியல் இந்த நாட்டிலேயே நிலைபெறுமானல், இந்தநாட்டுப் பொருளாதா ரம் இந்த நாட்டிலேயே நிர்ணயிக்கப்படுமானல், இந்த நாட்டு வருமானம் இந்த நாட்டுக்கேப் பயன்படுமானல். இந்த நாட்டு வரிப்பணம் இந்த நாட்டிலேயே தங்குமானல், அப்பொ ழுது டில்லி ஆதிக்கத்திடம் கேட்கவேண்டுமே என்று ஏக்கத்துடன் காமராசர்கள் பதில் சொல்லத் தேவையிருக்காது, பத்தில் ஒன்ரு வது பங்குதாவேண்டுமென இங்குள்ளோர், பரதவிக்கவேண்டிய பரிதாபக் காட்சியும் இருக்காது.

கருத்துக் கதிர்

நாட்டாண்மைக் கழகத் தேர்தல்

அண்மையில் மாவட்டந்தோறும் நாட்டாண்மைக் கழகத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளைச், சென்னை அரசியலார், மிக மும்முரமாகச் செய்துவருகிறார்கள்.

அரசாங்கத்தின் நடவடிக்கையும், போக்கும், எல்லா மாவட்டங்களிலும் காங்கிரஸ் கட்சியை ஆளுங்கட்சியாகக் கொண்டுவருதற்கான முறையில் அமைந்திருக்கின்றன என்றும், அதற்கான வகையில் தேர்தல் முறை வகுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரியவருகின்றன.

நடக்கப்போகும் தேர்தல் புதிய முறையில் நடைபெறும் என்று ஆட்சியாளர் கூறுகிறார்கள். அதன்படி வாக்குரிமைச் சீட்டு வாக்காளர் கையில் கொடுக்கப்படும்; அதில் தேர்தலுக்கு நிற்பவர்களின் பெயர்கள் அகரவரிசையில் குறிக்கப்பட்டிருக்கும்; ஒவ்வொரு பெயருக்கும் எதிரே அவரவர் அடையாளக்குறி (சின்னம்) பொறிக்கப்பட்டிருக்கும்; அந்த அடையாளக்குறிகளுக்கு எதிரே ஒவ்வொரு வெற்றுக் கட்டம் காணப்படும்; வாக்காளன், தான் யாருக்குத் தனது வாக்குரிமையை அளிக்க விரும்புகிறானோ, அவரின் பெயரையோ அல்லது அவரது அடையாளக் குறியையோ கண்டுகொண்டு, அவற்றிற்கு எதிரேயுள்ள வெற்றுக்கட்டத்தில், X என்று கோடுகள் இழுக்கவேண்டும்; அப்படி இழுக்கப்படும் கோடுகள் சுற்றியுள்ள கட்டத்தின் கோடுகளைப் போய்த் தொடக்கூடாது; அப்படித் தொட்டால் அந்தச் சீட்டு செல்லுபடியாகாது; X கோடுகள் கிழிக்கத் தெரிந்தவர்கள் இரகசிய முறையில் கோடுகளை இழுத்து, வாக்குரிமைச் சீட்டைப் பெட்டியில் போடலாம்; கோடுகள் கிழிக்கத் தெரியாதவர்கள் தங்களுக்குப் பதிலாகத் தேர்தல் அதிகாரியை விட்டே யாருக்கு வாக்குரிமைச் சீட்டுப் போடவேண்டும் என்பதைச் சொல்லிக் கோடுகளை இழுக்கச் சொல்லலாம். சென்ற பொதுத்தேர்தலில் கையாண்ட முறையைக் காட்டிலும் இந்தப் புதுமுறை எந்தவகையிலே எளிமையும், ஏற்றமும், சிறப்பும், செம்மையும் கொண்டதோ, தெரியவில்லை.

நமது நாட்டில் வாக்காளர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். அவர்கள் தங்கள் கேள்வியறிவைப் பயன்படுத்தித்தான் வாக்குரிமை வழங்கவேண்டுமேயொழிய, கல்வியறிவைப் பயன்படுத்த வழியில்லை. X குறியிட்டு வாக்களிக்கும் முறை எழுதப்படிக்கத் தெரிந்தவர்களால்தான் இரகசியமான முறையில் கையாளப்பட முடியும்; எழுத்தறிவில்லாதவர்கள் இரகசியமுறையைக் கையாளமுடியாது, வெளிப்படையான முறையில்தான் தேர்தல் அதிகாரியைக் கொண்டு வாக்களிக்க முயலவேண்டும். இந்த முறை அமுலிலிருந்த காலத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் வாக்குகள் பணம், செல்வாக்கு, அதிகாரம், ஆதிக்கம், உருட்டல், மிரட்டல் ஆகியவைகளுக்கு இரையாகவேண்டி வந்தன. எழுதப்படிக்கத் தெரியாதவர்களும் இரகசிய முறையில் எளிதில் வாக்களிக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் மாட்டுப்பெட்டி, கோழிப்பெட்டி, குதிரைப்பெட்டி, குடிசைப்பெட்டி வைக்கும் முறை சென்ற பொதுத் தேர்தலில் ஏற்படுத்தப்பட்டது. இந்த முறையைவிட எளிய சாலச் சிறந்தமுறை ஒன்று கொண்டுவரப்படுமேயானால், அதனை வரவேற்க யாரும் தயாராக இருப்பார்கள். ஆனால் அரசியலார் இப்பொழுது எண்ணியிருக்கும் முறை எளிமையானது என்றோ சிறந்தது என்றோ யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பின் ஏன் இந்தமுறை எண்ணப்படுகிறது என்றால், அதில்தான் சூழ்ச்சி பொதிந்துகிடக்கிறது.

சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பெரும்பாலும் பணம்படைத்தோரையும், செல்வாக்குக்கொண்டோரையும், ஆதிக்கம் செலுத்துவோரையும்தாம் பல இடங்களில் நிற்கவைத்தது. அவர்கள் தங்கள் பணம்—செல்வாக்கு—ஆதிக்கம் ஆகியவற்றை முடிந்தவரையில் பயன்படுத்தி வாக்குகள் பெறமுயன்றனர். ஆனால் பொதுமக்களோ எனில் அந்த உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சாமல் தங்கள் விருப்பப்படி, காங்கிரசல்லாதார்க்குத் தங்கள் வாக்குகளை வழங்கினார்கள். அதனால் காங்கிரசுக்கு எதிர்பாராத சரிவு அப்பொழுது ஏற்பட்டது.

வரப்போகும் நாட்டாண்மைக் கழகத் தேர்தலில் காங்கிரஸுக்கு அப்படிப்பட்ட சரிவு ஏற்படக்கூடாது என்பதற்காகவும், பணம்—செல்வாக்கு—ஆதிக்கம்—அதிகாரம்—உருட்டல்—மிரட்டல் ஆகியவைகள் வீண்போகக்கூடாது என்பதற்காகவும், எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் வாக்குகளை உறுதியாக மேற்கண்ட ஆயுதங்களின்மூலம் எளிதில் வாங்கிவிடலாம் என்பதற்காகவும், காங்கிரஸ் ஆட்சியாளர் புதுமுறை ஒன்றைக் கையாளுகிறார்கள். இது வஞ்சகம்! சூழ்ச்சி!! கொடுமை!!!

புதுமுறையால் குன்னியூர் அய்யர் பண்ணையிலும், வலிவலம் தேசிகர் பண்ணையிலும், வடபாதிமங்கலம் முதலியார் பண்ணையிலும் அவர்களின் ஆதிக்கம் நிறைந்த கிராமங்களிலும் உள்ள இலட்சக்கணக்கான எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் வாக்குரிமைகள் பண்ணை முதலாளிகளின் விருப்பத்திற்கு மாறாக எப்படியும் போகமுடியாது என்பதுதானே புதுமுறையின் உள்நோக்கமாக இருக்கமுடியும்! இல்லையாயின் எளிமையல்லாத, ஜனநாயக விருப்பத்திற்கு மாறான நடைமுறையில் தோற்றுப்போன ஒருமுறையைக் கொண்டுவருவார்களா? பணக்காரர்களையும், செல்வாக்குப் படைத்தோரையும், ஆதிக்கக்காரர்களையும் காங்கிரஸைத் தவிர வேறு எக்கட்சியாலும், அவ்வளவு எளிதாக வலைவீசிப் பிடிக்கமுடியாது என்ற துணிவில்தான் புதுமுறையை வலுவிக்கக் கையாள முயலுகிறார்கள் காங்கிரஸ் ஆட்சியாளர். இந்த முறையில் நேர்மையற்ற தேர்தல் அதிகாரிகள் தங்கள் விருப்பத்திற்கிணங்க பித்தலாட்டங்கள் செய்ய எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. எனவே புதுமுறையைக் கைவிடச்சொல்லி, சென்ற பொதுத் தேர்தல் முறையையே நாட்டாண்மைக் கழகத் தேர்தலிலும் கைக்கொள்ளச் செய்ய, எல்லாக் கட்சியினரும், பொதுமக்களும் ஒருமித்த குரல் எழுப்பவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த ஆகாத முறையை அமுல் நடத்தாமலிருக்க எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்க முயலவேண்டும். இல்லையெனில் ஓரளவுக்கு எதிர்பார்க்கப்படும் ஜனநாயகமும், புதுத் தேர்தல் முறையால் படுகொலைக்கு உள்ளாகிவிடும் என்பது உறுதி.

வரப்போகும் நாட்டாண்மைக் கழகத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வழக்கமாகக் கையாளும் முறையைத்தான் மேற்கொள்ளும். கழகம் ஸ்தலஸ்தாபனத் தேர்தலில் நேரிடையாகப் போட்டிபோடாது; ஆனால் கழகத்தைச் சார்ந்தோர் தங்கள் சொந்தத் திறமையில் போட்டியிட்டுக்கொள்வதை அனுமதிக்கும். எந்த இடத்திலும் கழகம் யாரையும் நிறுத்தாது; நிற்கும் கழகத் தோழர்கள், தங்களுக்குள்ளேயே போட்டியிட்டுக்கொள்ளும்படியான சூழ்நிலை, எங்கேனும் ஏற்பட்டுவிட்டால், கூடியவரையில் கழகத் தோழர் ஒருவரே நின்று போட்டியிடும்படியான சூழ்நிலையை உருவாக்கும்.

அக்கரைச் சீமையிலே

பிரிவினை எழுச்சி வலுக்கிறது

மேற்குப் பாக்கிஸ்தானின் ஆதிக்கப்பிடியிலிருந்து தன்னைத் தேவையான அளவுக்கு விடுவித்துக்கொள்ளப் பாடுபடும் கீழ்வங்கத்தின் கோரிக்கையை ஆதரிக்கும் அளவுக்கு மேற்குப் பாக்கிஸ்தானின் ஆட்சித் தலைவர்களிடையே நிலைமை உருவாகிவருகிறது. பஞ்சாபின் முதன் மந்திரியும், லீகின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான பிரோஸ்கான் நூன், "கீழ்வங்கப் பிரதிநிதிகள் வற்புறுத்தும்பட்சத்தில் அதிக அதிகாரமில்லாத பலவீனமான மத்திய அரசாங்கமே இருக்கவேண்டியிருக்கும். கீழ்வங்கத்திற்குச் சுயாட்சி அளிக்கப்படும் பட்சத்தில் பாக்கிஸ்தான் சமஷ்டிக்குள் மேற்குப் பாக்கிஸ்தானை உப சமஷ்டியாக்குவதை நான் ஆதரிக்கிறேன்" என்று கூறியுள்ளார். தற்காப்பு, வெளிநாட்டு விவகாரம், நாணயச்செலவாணி ஆகியவற்றைப் பொறுத்து மட்டுமே மத்திய அரசாங்கத்துக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்று கீழ்வங்க முதன்மந்திரி பஸ்லுல் ஹக் வற்புறுத்திவருகிறார். கீழ்வங்கத்தின் எழுச்சிக் குரல் ஓரளவுக்கு வெற்றிபெறத் தொடங்கிவிட்டது என்பதை நூன் அவர்களின் பேச்சு தெளிவாக்குகிறது. என்றைக்கேனும் ஒருநாள் கிழக்குப்பாக்கிஸ்தான் தனி நாடாக பிரிந்து தீரும் என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. கிழக்குப் பாக்கிஸ்தானின் அடுத்தப் போராட்டம் தனிநாடு பிரிவினைக் கிளர்ச்சியாகத்தானிருக்கும்.

ஃ ஃ ஃ

நவீன சித்ராகுப்தர்

நமது மாநிலத்து நிதிபற்றிய கணக்கு விவரங்களைக் கவனிப்பவராக மட்டுமே கனம் சுப்பிரமணியம் அவர்களைப்பற்றி எல்லோரும் நினைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் நிதிபற்றிய கணக்குமட்டுமல்ல, சித்ராகுப்தனைப் போன்று விதிபற்றிய கணக்குகளையும் தருபவராகக் காணப்படுகிறார். யமபுரத்தில் கணக்கு மந்திரியாக இருப்பவர் சித்ராகுப்தராம். அவர் ஒவ்வொருவரின் ஏட்டையும் பார்த்து, சொர்க்கத்திற்கு யார் யாரை அனுப்புவது? நரகத்திற்கு யார் யாரை அனுப்புவது? என்று பிரித்தனுப்புவாராம். அதேபோல் நமது மந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்கள் யாரார் சொர்க்கத்தைப் பெறுவார்கள். யாரார் நரகத்தை அனுபவிப்பார்கள் என்று வரையறுத்துக் காட்டியுள்ளார்கள்.

தாராபுரத்திற்கு அருகிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் பேசும்பொழுது கனம் மந்திரி சுப்பிரமணியம் அவர்கள், "தெய்வத்தைத் தொழாதவர்கள், நாஸ்திகப் பிரசாரம் செய்து பள்ளிக் குழந்தைகள் மனதை மாற்ற முயலும் தமிழ்ப் பண்டிதர்கள் ஆகியோர் இந்த ஜென்மத்திலேயே நரகம் அனுபவிப்பார்கள்" என்று கண்டுபிடித்துச் சொல்லியுள்ளார்.

யமபுரத்துச் சித்ராகுப்தன் கணக்குப்படி நரகம் சொர்க்கம் என்பது இப்பொழுது செய்த நன்மை தீமைகளுக்கு இந்த வாழ்வு முடிந்ததும் அப்புறம் கிடைப்பது. ஆனால் கனம் சுப்பிரமணியத்தின் கணக்குப்படி நரகம் இந்த வாழ்விலேயே கிடைத்துவிடும் என்று கூறுகிறார். அது எவ்வளவு தூரம் உண்மையோ நமக்குத் தெரியாது. ஆனால், கனம் சுப்பிரமணியத்தின் மந்திரிப் பதவிக்காலத்தில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு நரகத்தில் படும் அவதிதான் கிடைத்திருக்கிறது. புதிய கல்வித்திட்டத்தைக்கொண்டுவந்து, வேலை நேரத்தைக் கூட்டி, ஆசிரியர்களைக் குறைத்து, கல்வித்திட்டத்தைக் குறை கூறியவர்களை சிறையில் தள்ளி, தடியால் அடித்து, துப்பாக்கியால் சுட்டு...அப்பப்பா! இதைவிட நரகவாழ்வே மேலாயிருக்கும்!

புதிய கல்வித்திட்டத்தின் மூலம் நாட்டின் சுபிட்சத்துக்கு குறுக்குவழி கண்டுபிடித்த கனம் சுப்பிரமணியம், சொர்க்கலோகத்துக்கும் நரகலோகத்துக்கும் செல்லும் குறுக்குவழி

களைத் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறார். அந்த முயற்சியில், சொர்க்கத்துக்குச் செல்லும் பாதையில் அவர் இருக்கிறாரா, அல்லது நரகத்துக்குப் போகும் பாதையில் இருக்கிறாரா என்பது மட்டும் தெரியவில்லை.

ஃ ஃ ஃ

கடவுள் மறைக்கப்பட்டார்!

"ஆலயங்களின் சந்நிதிகளில் பாதரச விளக்குகள் போடுவதால் அவ்விளக்கின் ஒளியினால் கர்ப்பகிரகத்திலுள்ள கடவுள்கள் மறைக்கப்படுகின்றன. சந்நிதிகளில் போடப்பட்டிருக்கும் பாதரச விளக்குகளை அப்புறப்படுத்துமாறும், கர்ப்பக்கிரகத்தில் எண்ணெய் விளக்குகளை ஒளிகுன்றாது போட்டுவருமாறும் ஆலய நிர்வாகிகளுக்கு ஓர் உத்தரவிட்டிருக்கிறேன்" என்று சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சில கோயில்களை இந்து அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் பார்வையிடச் சென்றாராம். அப்பொழுது சில கோயில்களிலுள்ள மூல விக்கிரகங்கள் மறைக்கப்பட்டிருந்தனவாம். அதற்கு பாதரச விளக்குகளே காரணம் என்று தெரிந்ததாம். பின் அவற்றை அகற்றிவிட்டு, எண்ணெய் விளக்குகள் போடுமாறு உத்தரவிட்டாராம்.

கடவுள் மறைக்கப்பட்டிருக்கிறார். அது பாதரச விளக்குகளால் மட்டுமல்ல. கோயில்களிலுள்ள கடவுள்களெல்லாம் மறைக்கப்பட்டுதான் உள்ளனர்.

கடவுள் மறைக்கப்பட்டுள்ளார், அவருக்கு முன் நிற்கும் அர்ச்சகர்களாய், மற்றவர்களை தூரத்தில் தள்ளிவிட்டு, அருகில் போய் நிற்க உரிமை கொண்டாடிடும் கழுகொத்த பூசாரிகளால்.

கடவுள் மறைக்கப்பட்டிருக்கிறார், அக்கிரமக்காரன் செய்கிற அர்ச்சனையால், அநியாயத்தைச் செய்கிறவன் தருகிற ஆராதனைகளால்.

கடவுள் மறைக்கப்பட்டிருக்கிறார் பொறாமைக்காரன் போடுகிற சாம்பிராணிப் புகையால், இரக்கமற்ற நெஞ்சினன் கொட்டுகிற பாலாபிஷேகத்தால்.

கடவுள் மறைக்கப்பட்டிருக்கிறார்; மக்களைக் கந்தலாடையினராகச் சுற்றவிட்டு கடவுளுக்கு

பட்டாடைகளைப் போர்த்தவரும் கனதனவான்களால், எண்ணற்றக் குடும்பங்களைக் கண்ணீரில் புரளவிட்டுக் கடவுளின் மார்பிலே இரத்தின ஆரத்தையும், அணி மணிகளையும் புளச் செய்யும் அக்கிரமக்காரர்களால். பட்டாடைகளும், இரத்தின ஆரங்களும், வைரமுடிகளும், பொன் தகடுகளும் கடவுளை மறைத்துவிட்டன.

நமது நாட்டில் கடவுள்கள் ஏழைமக்களிடமிருந்து நிச்சயமாக மறைக்கப்பட்டிருக்கிறார். வேதனை யுள்ளத்தினரால், வெதும்பிய வாழ்வினரால், கண்ணீர் மல்கும் கண்ணினரால் கடவுளைக் காணமுடியவில்லை. கோயில்களில் குடிகொண்டுள்ள கடவுள்களை, ஜாதியில் உயர்ந்தவர்களால், பணத்தில் உயர்ந்தவர்களால், பட்டாடையினரால், பரிமள வாழ்வினரால்தான் காணமுடிகிறது. பாமரிகளால், தரித்திரர்களால், ஏழைபாழைகளால், பகல்பட்டினி இராப்பட்டினிகளால், கோயிலிலுள்ள கடவுளை காணமுடியவில்லை.

கோயில்களிலுள்ள பாதரச விளக்குகளை அகற்றும்படி, அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் உத்தரவிட்டுள்ளார். அதுமட்டும் போதாது. கோயிலிலுள்ள பாவக்கறைகளை அகற்றவேண்டும். சூதுக்காரர்களின் கூடாரமாக, சுயநலக் கும்பலின் உறைவிடமாக இருப்பதை மாற்ற வேண்டும். புரியாத மொழியினர், தெரியாத வழியினர், வஞ்சக நெஞ்சினர் இவர்கள்தாம் கோயில்களின் ஒளியைக் குறைச்செய்கின்றனர். அவர்களையும் அகற்றவேண்டும்.

உண்மையான ஒளி தோன்றவேண்டுமென்றால், பாதரச விளக்குகளை அகற்றிவிட்டு, எண்ணெய் விளக்குகளைப் போடுவதால் மட்டும் வந்துவிடாது. உண்மையான ஒளி, ஏழையின் கண்களில், பாடுபடுபவரின் முகங்களில் தோன்றவேண்டும்.

அட்டைப்பட விளக்கம் :

உழவர் புரட்சி!

மிகப் புகழ்பெற்ற பிரெஞ்சுப் புரட்சி யென்பது 18-வது நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்றதாகும். புரட்சி என்ற சொல்லுக்கு முழு அர்த்தத்துடன், வரலாற்றில் புது ஏட்டைப் புரட்டும் விதத்தில் அந்தப் புரட்சி வெடித்தெழுந்தபோதிலும். அதற்குமுன் சிறு, சிறு அளவில் புரட்சிகளும், கலகங்களும் பிரெஞ்சு நாட்டில் தோன்றியிருக்கின்றன. அவ்வாறு 14-வது நூற்றாண்டின் மத்தியில் பிரெஞ்சு நாட்டில் உழவர் புரட்சியொன்று மூண்டது.

அப்பொழுது நிலங்களெல்லாம் பிரபுக்களுக்குச் சொந்தமாயிருந்தன. உழவர்கள் பரம்பரை பரம்பரையாக அடிமைகளாக இருந்தனர். ஒருவன் உழவர் குடும்பத்தில் பிறந்துவிட்டால், அவன் அந்தக் குடும்பத்திற்கு ஆண்டையாக இருக்கும் பிரபுவுக்கு அடிமையாகிவிடுகிறான். பின் வயது வந்ததும், அந்தப் பிரபுவின் நிலத்தை உழுது பயிரிடவேண்டும். பிரபு தருகிற கூலியைப் பெற்று வாழவேண்டும். வேறு எந்தவிதத்திலும் அவனுக்கு உரிமையில்லாமலிருந்தது. நிலப்பிரபுக்களைப்போலவே, மதக்குருமார்களுக்கும் சமூகத்தில் ஆதிக்கமும், அதிகாரமும் இருந்தது. நிலப்பிரபுக்களுக்குத் தலைவனாக மன்னன் இருந்தான், மதக்குருமார்களுக்குத் தலைவனாக போப்பாண்டவர் இருந்தார். இந்தச் சமுதாய அமைப்பைப் பூராவும், உழவன் தாங்கிக்கொண்டிருந்தான்.

ஐரோப்பாவில் இந்த நிலப்பிரபுக்களின் ஆட்சிக்காலம் பதினான்காவது நூற்றாண்டில் சீரழியத் தொடங்கியது. மதக்குருமார்களின் மோசாண்டித்தனத்தை எதிர்த்து விக்ளிப், ஹஸ் போன்றவர்கள் செய்த பிரசாரம் மக்களிடையே புதிய விழிப்பை உண்டாக்கியது. மேலும் பதினான்காவது நூற்றாண்டின் மத்தியில், மக்களின் வறுமை நிலை அளவுக்குமீறி அதிகரித்து, ஒருவகைக் கொள்ளைநோய் ஐரோப்பா பூராவிலும் பரவி, ஏறத்தாழ மூன்றில் ஒருபங்கு மக்களைச் சாகடித்தது.

அடிமைகளாகப் பிறந்து, அவதியில் உழன்று, நோயாலும், வறுமையாலும் தாக்கப்பட்ட பிரெஞ்சு நாட்டு உழவர்கள், 1358-ல், அடிமைத்தளையை அகற்றப் புரட்சி செய்தனர். நிலப்பிரபுக்களை எதிர்த்துக் கிளம்பினர். மாளிகைகளையும், கோட்டைகளையும் தாக்கினார்கள். அத்தகைய புரட்சியின் ஒரு காட்சியே அட்டைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் புரட்சி வெற்றிபெறவில்லை. பிரபுக்களும், மன்னரின் படைகளும் சேர்ந்து கடுமையான முறையில் அடக்கிவிட்டனர். கனல் அடங்கியது; ஆனால் அவிந்துவிடவில்லை. அவ்வப்பொழுது புகைந்து, புகைந்து பின் கடைசியாக 18-ம் நூற்றாண்டின் இறுதியில் எரிமலையெனக் கிளம்பிக், கனலைக் கக்கிற்று.

139

ஆசிரியர்

மாநிலங்களுக்கு சுயாட்சி

இந்திய அரசியல் சட்டத்தின்படி, மத்திய அரசாங்கம் மிகப் பலமுள்ளதாகவும், மாநில அரசுகள் பலமற்றவைகளாகவும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டும் நாம் பிரிவு மனப்பான்மையினர், பேதபுத்தியினர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறோம். மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைக் குறைத்து, மாநில அரசுகளை வலுப்படுத்தும்படி கூறுவது நாட்டின் ஒற்றுமையைக் கெடுக்கும், பாரத பூமிக்கு பெருங்கேடு செய்வதாகும் என்று காங்கிரஸ் தலைவர்கள் உரக்கக்கூவுகின்றனர். ஆனால் அவர்களுக்குத் தக்க அறிவுரை கூறுவதுபோல், காங்கிரஸ் பழம்பெரும் தலைவர்— எல்லைக் காந்தி என்று போற்றப்படும் கபார்கான் அவர்கள் பேசியுள்ளார். "மாகாணங்களுக்கு அதிக அளவு சுயாட்சி அளிக்கப்பட வேண்டும். மாகாண ஆட்சியில் குறுக்கிட்டு, மக்கள் பிரதிநிதியில்லாதவர்களைக் கொண்ட ஆட்சியைத் திணிக்கும் அதிகாரம் மத்திய சர்க்காருக்கு இருத்தலாகாது" என்று பத்திரிக்கை நிருபர்களிடம் அறிவித்துள்ளார். அவர் கீழ் வங்கத்தில் பாக்கிஸ்தான் மத்திய அரசாங்கம் நடந்துகொள்ளும் போக்கை மனதில் வைத்துக்கொண்டு கூறுகிறார்.

அதே விதமான நிலைதான் இந்திய துணைக் கண்டத்திலும் நிலவுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் மந்திரிசபையைக் கலைத்துவிட்டு, இந்திய அரசியல் தலைவரின் நேரடி ஆட்சிக்கீழ் கொண்டுவரப்பட்டது. மத்திய அரசாங்கம் வலுத்து, மாநில அரசுகள் வலுவற்று இருக்கின்றன. எந்த நேரத்தில் நினைத்தாலும், மத்திய அரசாங்கம் குறுக்கிட்டு மாநில அரசாங்கங்களை தமது நேரடி ஆட்சிக்குக் கீழ், ஜனநாயகமற்ற முறையில் கொண்டுவரமுடியும். அவ்வளவு எதேச்சாதிகார வலிமை டில்லி மத்திய அரசாங்கத்துக்கு இருக்கிறது. இந்த முறையைக் கண்டித்து, மாநிலங்கள் முழு உரிமைகளுடன், சுயாட்சி முறையில் நடக்க வேண்டும் என்று கூறுவதை எல்லைக் காந்தி கபார்கான் வலியுறுத்தியுள்ளார். மாநிலங்கள் சுயாட்சி கேட்பது தேசத்துரோகம் என்று கூக்குரலிடும் தேசியவாதிகளின் கவனத்திற்கு எல்லை காந்தியின் அறிவுரையை வைக்கிறோம்.

ஃ ஃ ஃ

நேபாளத்துக்கு இந்தியாவின் உதவி

மாநில அரசாங்கங்கள் கேட்கும்பொழுது பணமில்லையென மத்திய அரசாங்கம் கூறுகிறது; வசூலிக்கப்படும் வரியில் சிறிது பங்கு கேட்டால்கூட கிடையாது என்று டில்லி ஆதிபத்தியம் அழுத்தந் திருத்தமாக பதில் தருகிறது. ஆனால் வட இந்தியாவில் அது வாரியிறைக்கிற பணத்துக்குக் கணக்கு எதுவும் கிடையாது.

இப்பொழுது நேபாள நாட்டுக்கு டில்லி மத்திய அரசாங்கம் 7 கோடி ரூபாய் உதவியாக அளிக்கப்போகிறது, எத்தகைய எதிர்பார்ப்புமின்றி, எத்தகைய நிபந்தனையுமின்றி. நேபாளம் தனிநாடு, இந்திய எல்லைக்குள் அடங்காத நாடு, டில்லி அதிகாரத்துக்குக் கட்டுப்படாது சுயேச்சையுடன் இருக்கும் நாடு. அதற்கு 7 கோடி ரூபாய் உதவியாகத் தர இந்தியா முன்வந்துள்ளது. இவ்வளவும் அந்த எல்லையோர நாட்டினர் நல்லெண்ணத்தைப் பெறவேண்டுமென்ற ஒரே காரணத்துக்காக. எல்லைக்குள் அகப்பட்டு, டில்லி அதிகாரத்துக்கு அடங்கிக்கிடக்கும் இடங்களுக்கு எதுவும் சரிவரக் கிடைப்பதில்லை.

இந்த 7 கோடி ரூபாய் மட்டுமல்லாமல், மேலும் பல உதவிகள் தரப்பட்டிருக்கின்றன. நேபாளத்துக்கும், இந்தியாவுக்கும் இடைப்பட்ட எல்லையோரத்தில் கோசி அணைத்திட்டம் என்று ஒரு நீர்ப்பாசன, மின்சாரத்திட்டம் வேலை செய்யப்படுகிறது. அது முடிவடைந்ததும், அதிலிருந்து மின்சாரம், தண்ணீர், முதலியவைகள் நேபாளத்துக்குக் கிடைக்கும். ஆனால் அவற்றுக்கு நேபாளம் பணமெதுவும் கொடுக்காது. செலவு ஏதுமில்லாமல் அவை நேபாளத்துக்குக் கிடைக்கும். இவ்வளவு தாராளத்துடன் கட்டப்படும் திட்டத்துக்கு இந்திய அரசாங்கம் 37 கோடி ரூபாய் செலவிடுகிறது! 7 கோடி ரூபாய் உதவியாக, பின் 37 கோடி திட்டத்தின் பலன்கள் இனாமாக! இந்திய துணைக்கண்டத்தில் வெவ்வேறு பகுதிகளில் சுரண்டிச் சேர்க்கப்படும் வரிப்பணம், வாரி யிறைக்கப்படுகிறது. அதிகாரத்துக்குள் அடங்கிக் கிடக்காமல், சுயேச்சை பெற்று, எல்லையோரமாக இருக்கும் நாடுகளுக்குத்தான் மதிப்பும், மரியாதையும், வலுவில் உதவியும் கிடைக்கும்போலும்!

இந்தியாவில் ஒளிப்படம்

இந்தியாவில் ஒளிப்படம் (சினிமா) காட்டத் தொடங்கிய காலத்திலிருந்து அதன் வளர்ச்சியில் காணக்கூடிய சிலபல வரலாற்றுக் குறிப்புகள் வருமாறு :

1896—முதன் முதல் ஒளிப்படம் லூமிரி பிரதர்ஸ் என்பவர்களால் 1896-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 7-ம் நாள் காட்டப்பட்டது.

1907—கல்கத்தாவில் முதன்முதல் ஒளிப்பட கொட்டகை ஜே. எப். மாடன் என்பவரால் கட்டப்பட்டது.

1913—பம்பாயைச் சேர்ந்த டி. பால்கே என்பவர்தான் முதல் இந்திய ஒளிப்படத்தைத் தயாரித்த முதல் இந்தியர் ஆவார். அவர் பிடித்த முதல் படம் 'ஹரிச்சந்திரா' என்ற படமாகும். அது பம்பாயில் 'காரனேஷன்' ஒளிப்படக் கொட்டகையில் 1913-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் காட்டப் பெற்றது.

1917—வங்காளத்தில் தயாரித்த முதல் படம் 'நள தமயந்தி' என்றபடமாகும். அதனைத் தயாரித்தவர் ஜே. எப். மாடன்.

1918—இந்திய ஒளிப்படம் பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1920—ஒளிப்படங்களைத் தணிக்கை செய்யும் முறை கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங்களில் முதன்முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

1921—தென் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் படம் 'பீஷ்ம பிரதிக்ஞை'.

1922—ஒளிப்படத்தின்மீது கேளிக்கைவரி முதன்முதல் வங்கத்தில் விதிக்கப்பட்டது.

1927—ஒளிப்படம் பற்றி ஆராயும் குழு ஒன்றினை இந்திய அரசாங்கம் நிறுவியது.

1929—முதன் முதல் இந்தியாவில் காண்பிக்கப்பட்ட பேசும்படம் 'மெலடி ஆவ் லவ்' என்ற 'யூனிவர்ஸல்' நிலையத்தார் தயாரித்த ஆங்கிலப் படமாகும்.

1931—பம்பாயைச் சேர்ந்த 'இம்பீரியல் பிலிம் ஸ்டுடியோ' நிலையத்தார்தான் 'ஆலம் அரா' என்ற முதல் இந்திய பேசும்படத்தைத் தயாரித்தார்கள்.

1931—'பிரபாத் ஸ்டுடியோ'வைச் சார்ந்தவர்கள் முதன் முதலாக இந்திய வண்ணப் பேசும் படத்தைத் தயாரித்தார்கள். 'சைரேந்திரி' என்பதே அந்தப்படம். ஆனால் படத்திற்கு வண்ணம் ஜெர்மனியில் கொடுக்கப்பட்டது.

1931—இந்தியர்கள் தயாரித்த முதல் ஆங்கிலப் படம் 'கர்மா' என்பதாகும். அதன் பெரும்பகுதி ஐரோப்பியரின் மேற்பார்வையின் கீழ் இங்கிலாந்திலே தயாரிக்கப்பட்டதாகும்.

1939—படத்தொழிலின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் இந்தியாவில் கொண்டாடப்பட்டது.

1940—'கோர்ட் டான்ஸர்' என்பதுதான் முதன் முதலாக இந்தியாவிலேயே, இந்தியரின் மேற்பார்வையின் கீழ், இந்தியரால் தயாரிக்கப்பட்ட ஆங்கிலப் பேசும்படமாகும்.

1943—இந்தியாவின் செய்திப்படங்கள் இந்திய அரசாங்கத்தால் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டது.

1949—பேசும்பட ஆய்வுக்குழு ஒன்று இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது.

1949—படத்தணிக்கைபற்றிய சட்டம் இந்திய அரசியல் சட்டத்தில் புகுத்தப்பட்டது.

1951—மத்திய தணிக்கை போர்டு பம்பாயில் 1951 ஜனவரி 15-ம் நாள் நிறுவப்பட்டது.

1952—அகில உலகப் படத்திருவிழா இந்திய அரசாங்கத்தால் பம்பாயில் 1952 ஜனவரி 24-ம் நாள் ஏற்பாடு செய்யப்பட்டது. அமெரிக்காவின் படத்தொழில் நிலையத்தின் அழைப்பின் பேரில் இந்திய நல்லெண்ணத் தூதுக்குழு இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்றது. 'பால்பா' என்ற வங்காளிப் படம் சமூக முன்னேற்றம்பற்றிய சிறந்த படப்பிடிப்பு என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, செக் அகில உலகத் திருவிழாவில், பதக்கம் ஒன்று அதற்குப் பரிசாகத் தரப்பட்டது.

வரையாது வழங்குதல்

[எழினி]

மலையமான் திருமுடிக்காரி ஏறத்தாழ ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிறப்புற்றிருந்த சிற்றரசன். அவன், தென்ஆற்காடு மாவட்டத்தில் ஓடும் பெண்ணையாற்றின் கரையை அடுத்துள்ள மலாடு என்று வழங்கும் மலைநாட்டுப் பகுதியை ஆண்டுவந்தான். திருக்கோவலூர் பகுதி அவனது ஆட்சியின்கீழ் அந்நாட்களில் அடங்கியிருந்தது.

மலையமான் திருமுடிக்காரி கொடைத்திறனும், படைத்திறனும் கொண்டு, பெரும் புகழும் பெற்றுச்சிறந்தோங்கிவிளங்கிவந்தான். அவனது வீரத்தின் பெருமையும், வள்ளல் தன்மையின் புகழும் தமிழகமெங்கும் பரவியிருந்தன. புவியரசர்களும், கவியரசர்களும் அவனது நட்பைப்பெற ஆவலுறுவதுண்டு. தமிழ் நாட்டின் முப்பெரும் வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் அவ்வப்போது திருமுடிக்காரியின் ஒத்துழைப்பை வேண்டிப் பெற்று, தங்களது படையெடுப்புகளுக்குப் பயன்படுத்திவந்தனர். திருமுடிக்காரி எவ்வெப்போது யார் யார் பக்கம் நின்று போரிடுவது நீதிக்கும் நேர்மைக்கும் பொருந்தி வருவதாகும் என்பதை ஆராய்ந்து அறிந்து அதன்படி ஒத்துழைப்பு நல்கி வந்தான்.

வறுமை, பஞ்சம், பசி, பட்டினி, ஏழ்மை ஆகியவைகளால் துரத்தியடிக்கப்பட்டு, யார் அடைக்கலம் வேண்டி அவனை அண்டி நின்றாலும், அவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளல்தன்மை அவனிடம் எப்பொழுதும் நீங்காது நிலவிவந்தது. இல்லை என்று வந்தோர்க்கு அவன் இலை என்று சொல்லியதேயில்லை. கற்றறிந்த புலவர்கள் வந்துவிட்டார்கள் என்றால், அதுவே அவனுக்குப் போதும். பொருள்களை வாரி வாரி வழங்குவான். புலவர்கள் வறுமையால் வாடுவதை அவன் ஒருநாளும் காணப் பொறுக்கமாட்டான். புலவர்கள் வேண்டியதை வேண்டியவாறெல்லாம் கொடுத்துவந்தான். அவனுக்கு இருந்த ஈகை உள்ளம் அவனது நாட்களில் வேறு எவர்க்கும் இருந்ததில்லை; முடியுடை மூவேந்தர்கள் வசதியிலும் வாய்ப்பிலும் திருமுடிக்காரியைவிடப் பன்மடங்கு உயர்ந்தவர்களாயிருந்தாலும், பண்பில், அவர்களால் திருமுடிக்காரியை எட்டிப்பிடிக்கமுடியவில்லை எனவேதான் அக்காலத் தமிழகமக்கள் அவனை வள்ளல் என்ற சொல்லுக்குரியவனாகக் கொண்டு, போற்றிப் புகழ்ந்துவந்தனர். அவன் வள்ளத்தன்மையில் மிகச் சிறப்புற்று விளங்கி வந்ததன் காரணமாகத்தான், அவனைப் பிற்காலத்தவர் கடை எழுவள்ளல்களில் ஒருவனாக வைத்து மதிப்புற எண்ணிவரலாயினர்.

முள்ளூர்மலை என்னும் வளப்பமுடைய மலை அவனுக்கு உரிமையுடையதாக இருந்தது. அந்த மலையிலிருந்து கிடைக்கும் வருவாயெல்லாம், வறியோர்க்கே போய்ச் சேர்ந்தன. உலகம் உய்யும் பொருட்டு உலக மக்களுக்குப் பொதுத்தொண்டு புரிந்துவந்த சான்றோர்கள், அத்தொண்டினை மேன்மேலும் செய்துவர வேண்டும் என்ற எண்ணத்தால், தன் நிலத்தில் ஒரு பகுதியை அச்சான்றோர்க்குக் கொடுத்துதவினன்.

அவனைப் பல பெயர்களாலும் அழைப்பதை மக்கள் மகிழ்ச்சிக்குரிய தொன்றாகக் கருதி வந்தனர். அவனை மலையன் எனவும், காரி எனவும், திருமுடிக்காரி எனவும், மலையமான் எனவும், மலையமான் திருமுடிக்காரி எனவும் அன்பால் பல பெயரிட்டழைத்தனர். அவன்

வைத்திருந்த அழகான, அவனது அன்பிற்குரிய குதிரையையும் மக்கள் காரி என்றே அழைத்தனர்.

மலையமானின் அறிவு ஆற்றல், பண்பு திறன் ஆகியவற்றைக் கேள்வியுற்ற பெரும்புலவரான கபிலர் ஒருபொழுது மலையமானைக் காணவந்தார். கபிலர் வருகையைக் கண்டு திருமுடிக் காரி உளம் பூரித்துப்போனான்; வாயார வாழ்த்தி வரவேற்றான்; கபிலரோடு நட்புறவு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது குறித்துப் பெருமிதங்கொண்டான். கபிலரும் தாம் எதிர்பார்த்ததற்குமேல் திருமுடிக்காரி சிறந்த பண்புகளின் இருப்பிடமாய் இருந்துவருவதைக் கண்டு பெருமகிழ்வெய்தினர். கபிலர் காரியின் வேண்டுகோளுக்கிணங்கி சில நாட்கள் அங்கேயே தங்கிவிட்டார்.

தாம் பெரும்புலவராதலால் தம்மை மிக்கச் சிறப்பாக வரவேற்று, வேண்டியவற்றை யெல்லாம் திருமுடிக்காரி கொடுக்கிறான் என்று கபிலர் முதலில் தம்முள் எண்ணி மகிழ்ந்திருந்தார். திருமுடிக்காரியோடு நாளோலக்க மண்டபத்தில் உட்கார்ந்து, அன்றாடம் அங்கு நிகழும் நிகழ்ச்சிகளையெல்லாம் காணும் வாய்ப்பு கபிலருக்கு ஏற்பட்டதால், காரியின் வள்ளல் தன்மையின் அளவை அவரால் ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடிந்தது. காரியிடம் புலவர் என்று சொல்லிக்கொண்டுவரும் ஒவ்வொருவருக்கும், அவன் அவர்களது தகுதி திறமையைப்பற்றிக் கவலைப்படாமல், வேண்டுவனவற்றை வரையாது வழங்கிவிடும் பண்புடையவனாக இருத்தலைக்கண்டு வியந்தார். காரி எல்லோரையும் ஒரேமாதிரியாக எடைபோடுவது தமக்கு அவ்வளவாகப் பிடிக்காததுபோலக் காட்ட கபிலர் எண்ணுகிறார். புலவர்களின் அறிவுச் சிறப்புக்கேற்ப, அவர்களுக்கு அளிக்கப்படும பரிசின் சிறப்பும், உயர்ந்து காணப்பட வேண்டும்; அறிவுடையோரின் தகுதி திறமைக்கேற்ப பரிசு வழங்கப்படவேண்டும் என்பதைக் காரிக்கு உணர்த்திப் பார்ப்போம் என்ற எண்ணம் கபிலருக்குத் தோன்றியது.

கபிலர் காரியை நோக்கி "காரி! நான் உன் வள்ளல்தன்மையைக் கண்டு மிகவும் மகிழ்கிறேன். ஆனல்...!" என்று இழுத்த குரலில் பேசினர்.

காரி கபிலரின் சொற்கேட்டுத் திடுக்கிட்டு "ஆனல்...! என்ன ஐயமே! ஏன் இழுத்துப் பேசுகிறீர்கள்! நான் ஏதேனும் குற்றம் செய்துவிட்டேனு? என்ன சொல்லுகிறீர்கள்! சொல்லுவீர் ஐயா!" என்று அச்சத்தோடு கேட்டான்.

"நீ குற்றம் ஒன்றும் செய்யவில்லை. ஆனல் நீ கொடுக்கும் தன்மையில் குறை ஒன்றிருக்கிறது" என்று கபிலர் கூறினர்.

"என்ன குறை ஐயா! என்ன குறை ஐயா! கூறுவீர், நான் திருத்திக்கொள்கிறேன்!" என்று பதை பதைப்புடன் கேட்டான்.

"உன்னிடம் பரிசில் வாங்க வருகிருர்களே புலவர்கள், அவர்களின் திறமையையெல்லாம் நீ அறிகின்றாயோ?"

"அறிவதற்கான அளவு போதுமான காலம் எனக்குக் கிடைப்பதில்லை. எனவேதான் அவர்களின் அறிவின் திறமையை ஆராய முற்படுவதில்லை."

"பின்பு எதையறிந்து நீ பரிசில் கொடுக்கிறாய்?"

"அவர்கள் புலவர்களாய் இருப்பதால், அவர்களது வறுமையைப் போக்குவது, வளப்பமுடைய என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஆகவே வேண்டுவனவற்றை யெல்லாம் கொடுக்கிறேன்."

"யாருக்கும் எதையும் கொடுத்துவிடுவது எளிது. ஆனல் அவன் திறமைக்கேற்றபடி ஆராய்ந்து, அறிந்து கொடுப்பதுதான் சிறப்பு."

"நான் வருவோரின் வறுமையைத்தான் அளந்து பார்க்கிறேன்; அவர்களின் வரிசையைப் பார்க்க எண்ணுவதில்லை."

"அறிவுடையோர்களின் தகுதி திறமைக்கேற்ப வரிசையறிதல் உனக்கு அவ்வளவு எளிதான செயலல்லதான்! எனினும் நீ வரிசைப் படுத்திப் பார்ப்பதை நன்ருக அறிந்தாயாயின், எல்லோரையும் ஒரேமாதிரியாகக் கணக்கிடுவதைத் தவிர்த்துத், தரம்பார்த்து நடந்துகொள்வாயல்லவா!"

வரையாது வழங்கும் வள்ளத்தன்மை காரியிடம் பொதிந்துகிடப்பதைக் கபிலர் சொல்லாமற் சொல்லிக்காட்டுகிருர்! கபிலரின் கருத்தைப் புரிந்துகொண்ட காரி, புலவரின் புலமைத்திறம் கண்டு புன்முறுவல் பூத்தான்.

ஃ ஃ ஃ

இது புறநானூற்றின் 121-ம் செய்யுளின் கருத்தை அடிப்படையாகக்கொண்டதாகும். காரியைப்பற்றிக் கபிலர் சில புறநானூற்றுப் பாடல்களிலே சிறப்பித்துப் பாடியுள்ளார். மற்றைய வள்ளல்கள் எல்லாம் வந்து இரப்போரின் தரம் அறிந்து வரிசை வழங்குவார்கள்; ஆனல் காரியோவெனில் வருவோரின் தரத்தைப் பாராமல், அவர்களின் வறுமையின் அளவைத்தான் பார்ப்பான் என்னும் கருத்தைக் கபிலர் இச்செய்யுளின் மூலம் மிக நயம்பட எடுத்துக் கூறுகிருர். காரிக்குக் கபிலர் எதிர்மறையாய்ச் சொல்லி, அவனது வள்ளல் தன்மையின் சிறப்பை உணர்த்தாமல் உணர்த்துகிருர்.

ஃ ஃ ஃ

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநன்(கு) அறிந்தனை ஆயின்
பொதுநோக்(கு) ஒழிமதி புலவர் மாட்டே.

மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

[புறம்-121]

[ஒருவனை - வள்ளலாகிய ஒருவனை; உள்ளி - நினைத்து; வரிசை-தரம்; அரிது-அருமை; ஈதல் கொடுத்தல்; மா-பெரிய; வண் - வண்மையையுடைய; தோன்றல் - தலைவன்; பொதுநோக்கு - பொதுவாக ஒருகரமாகப் பார்த்தல்.]

●●

வாலெங்கே?

கவி காளமேகம் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம் நூற்றாண்டின் முதலிலும் வாழ்ந்த ஒரு பெரும்புலவராவார். அவர் கும்பகோணத்தைச் சேர்ந்தவர். திருவரங்கம் கோயிலில் சிலகாலம் வேலைபார்த்து வந்தவர். அவரது புலமைத் திறம் சிலநாட்கள் வரையில் பலர்க்கும் தெரியாமலிருந்தது. அவர் எம்முறையில் எச்சொல்லை எவ்வாறு அமைத்துப் பாடவேண்டுமானாலும், அவ்வாறே உடனே அழகு தமிழில் அருமையாகப் பாடிக்காட்ட வல்லவர். அதனால் அவரை ஆசுகவி என்பர். அவரது பெயரும் புகழும் நாளடைவில் தமிழகமெங்கும் பரவி நின்றன. சிலேடை பாடுவதிலும், நகைச்சுவையமையப் பாடல் பாடுவதிலும் அவர் ஈடும் எடுப்பும் அற்று வாழ்ந்தார். ஒருபொழுது அவர் அரசன் திருமலைராயனைக் காண திருமலைராயன் பட்டினம் சென்றார். அங்கே போலிப் புலவர்கள் பலர் உட்கார்ந்திருந்தனர். அவர்களெல்லாம் கவிகள் என்று காளமேகத்திற்கு அங்கிருந்தோர் அறிமுகப்படுத்திவைத்தனர். உடனே காளமேகம்,

வாலெங்கே நீண்ட வயிறெங்கே யிரண்டு
காலெங்கே யுட்குழிந்த கண்களெங்கே—சாலப்
புவிராசர் போற்றும் புலவீர்காள் நீங்கள்
கவிராச ரேன்றிருந்தக் கால்.

என்று பாட்டின் மூலம் அவர்களைப்பார்த்துக் கேட்டாராம். கவி என்ற சொல்லுக்குக் குரங்கு என்ற பொருளைக் கொண்டு அவ்வாறு கேட்டாராம்.

கடவுள் அருளியதா - கவைக்கு உதவாததா!

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

இயற்கைக்கு மேலான ஒன்றாகிய, இயற்கையை மீறிய ஆற்றலிடத்து அதாவது கடவுளிடத்து நம்பிக்கையுடையவர்கள், 'கடவுளால் சொல்லப்பட்ட வேதங்கள்' என்று சிலபல நூல்களைக் கொண்டிருக்கிறார்கள். இந்த நூல்கள் எல்லா உண்மைகளையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பதாக அவர்களால் கருதப்படுகின்றன. அவைகள், அவர்கள் கருத்துப்படி நம்பவேண்டியவைகளாகும். அவைகளை எவனொருவன் மறுக்கிறானோ அவன் எல்லையற்ற காலம் வரையில் துன்பம் நுகரும்படி தண்டிக்கப்படுவான். அந்த நூல்கள் மனித பகுத்தறிவுக்கு ஒத்துவரவேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்டதல்ல. அவைகள் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவை. மனிதன் எவற்றை "உண்மைகள்" என்று கருதுகிறானோ, அந்த உண்மைகளைப் பற்றி அவைகளுக்குக் கவலையில்லை. அந்த நூல்களோடு ஒத்துவராத உண்மைகள் தவறானவைகள் என்றே கருதப்படும். அந்த நூல்கள் மனிதனுடைய அனுபவத்தோடும், மனிதனுடைய பகுத்தறிவோடும் தொடர்பு படாது தனித்து நிற்பனவாகும்.

கடவுளால் உரைக்கப்பட்டதாகக் கருதப்படும் நமது நூல்கள் "பைபிள்" என்ற பெயரைப் பெறுகின்றன. இந்தக் கடவுளருளிய நூலை, எவன் படிக்க நேரிடுகிறானோ, அவன், இதில், முன்னுக்குப் பின் முரண்பாடுகள், தவறுகள், இடைச் சேர்க்கைகள் ஆகியவற்றைக் கண்டு, தன்னுடைய அமைதியான உயிரை வாட்டி வதைத்துக்கொள்ள வேண்டியவனாவான். அவன் இதைப் படிக்கும்போது, சிந்தித்துப் பார்க்கவோ, பகுத்தறிந்து பார்க்கவோ அவனுக்குச் சிறிதும் உரிமை கிடையாது. இதை நம்பவேண்டியதுதான் அவன் செய்யவேண்டிய கடமையாகும்.

கோடிக்கணக்கான மக்கள், இந்த நூலைப் படிப்பதிலும், முன்னுக்குப் பின்னுள்ள முரண்பாடுகளைப் பொருத்திக் காண்பிப்பதிலும், பொருளற்றவைகளைத் தெளிவாக்குவதிலும், அபத்தமானவைகளை விளக்கிக் காட்டுவதிலும் தங்கள் வாழ்நாட்களை வீண்நாட்களாக ஆக்கியிருக்கிறார்கள். இப்படிச் செய்யும்போது, அவர்கள், ஒவ்வொரு குற்றத்திற்கும், ஒவ்வொரு கொடுமைக்கும் சமாதானம் கூறிக் கொள்கிறார்கள். இதிலுள்ள முட்டாள்தனங்களில், அளவிடற்கரிய அறிவுடைமை இருப்பதாகக் கண்டு மகிழ்ச்சி கொள்கிறார்கள். கடவுள் தன்மை கொண்ட வாக்கியங்களிலிருந்து, நூற்றுக்கணக்கான கோட்பாடுகளை உருவாக்கியிருக்கிறார்கள். எந்த இரண்டு வாசகர்களும் இதன் பொருளை ஒருபடியாக ஒத்துக்கொண்டார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் ஹீப்ரு, கிரேக்கம் முதலிய மொழிகளைக் கற்றறிந்திருக்கிறார்கள்; காரணம் பழைய-புதிய வேதங்களை, அவை முதலில் எழுதப்பட்ட அந்த மொழிகளிலேயே படித்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பது அவர்களது எண்ணம். அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகப் படித்தார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் ஒருவரோடொருவர் வேறுபட்டுக் காணப்பட்டார்கள். இந்த ஒரே நூலில் அவர்கள் இரு வேறுபட்ட கருத்துக்களையும் நிரூபித்துக் காட்டுவர் : ஒவ்வொருவரும் அழிந்துபடவேண்டும் என்பதையும் காட்டுவர், எல்லோரும் காப்பாற்றப்படவேண்டும் என்பதையும் காட்டுவர்; இதில் அடிமைத்தனம் ஆண்டவன் சம்மதம் பெற்றது என்ப

தும் இருக்கும், எல்லோரும் உரிமையோடு வாழவேண்டும் என்பதும் இருக்கும்; பலதார மணம் உரிமையின்பாற்பட்டது என்பதும் இருக்கும், ஒரு மனிதன் ஒரு மனைவிக்குமேல் கொண்டிருக்கக்கூடாது என்பதும் இருக்கும்; ஆற்றல்களெல்லாம் ஆண்டவன் கட்டளையால் இருக்கின்றன என்பதும் இருக்கும், இருக்கும் ஆற்றல்களை மாற்றவும், அழிக்கவும் மனிதர்கள் உரிமை படைத்தவர்கள் என்பதும் இருக்கும்; மனிதனுடைய நடவடிக்கைகளெல்லாம் முன்கூட்டியே எழுதப்பட்டவை, எல்லையற்ற காலந்தொட்டு இருந்துவருபவை என்பதையும் காட்டுவர், மனிதன் சுயேச்சை கொண்டவன் என்பதும் இருக்கும்; இழிந்த மதத்தினர் எல்லோரும் அழிந்துபடுவார்கள் என்பதும் இருக்கும், இழிந்த மதத்தினர் எல்லோரும் காப்பாற்றப்படுவார்கள் என்பதும் இருக்கும்; இயற்கை காட்டும் ஒளிவழி வாழ்வோர் எல்லையில்லாத் துன்பங்களை ஏற்பர் என்பதும் இருக்கும், தண்ணீர் தெளிக்கப்பட்டு 'ஞானஸ்நானம்' செய்யவேண்டும் என்பதும் இருக்கும்; 'ஞானஸ்நானம்' பெறாமல் உயிர் உய்வதற்கு வழியில்லை என்பதும் இருக்கும், 'ஞானஸ்நானத்'தால் பயனில்லை என்பதும் இருக்கும்; கடவுளின் தந்தை—மகன்—பூதம் மூன்று தன்மையையும் நம்பவேண்டும் என்பதும் இருக்கும், தந்தைக் கடவுளின் தன்மையை மட்டும் நம்பினால் போதும் என்பதும் இருக்கும்; 'ஹீபுருக் குடியானவர்' கடவுளாக இருந்தார் என்பதும் இருக்கும், அவர் அரை மனிதர், அவருடைய உண்மையான தந்தையாக இல்லாதவரும், ஆனால் தந்தை என்று சொல்லப்படுபவருமான ஜோஸபின் மூலமாக டேவிட் குருதியில் அவர் தோன்றியவர், ஆதலால் கிருஸ்துவைக் கடவுள் என்று நம்பவேண்டிய அவசியமில்லை என்பதையும் காட்டுவர்; அவருக்கு முன்னால் புனிதபூதம் வந்ததை நீங்கள் நம்பவேண்டும் என்பதையும் காட்டுவர், அதனை நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் அதனால் ஒரு வேறுபாடும் தோன்றாது என்பதையும் காட்டுவர்; ஞாயிற்றுக்கிழமையைப் புனித நாளாகக் கொண்டாடவேண்டும் என்பதையும் காட்டுவர், கிருஸ்து அப்படி ஒன்றும் சொல்லவில்லை என்பதையும் காட்டுவர்; கிருஸ்து தேவாலயம் ஒன்றை நிறுவினார் என்பதையும் காட்டுவர், அவர் எந்த தேவாலயத்தையும் நிறுவவில்லை என்பதையும் காட்டுவர்; இறந்துபட்டவர்களெல்லாம் எழுப்பப்படுவார்கள் என்பதையும் காட்டுவர், அப்படி எழுப்புதல் என்பது இல்லை என்பதையும் காட்டுவர்; கிருஸ்து மீண்டும் வருவார் என்பதையும் காட்டுவர், அவர் தமது கடைசி வருகையை முடித்துவிட்டார் என்பதையும் காட்டுவர்; கிருஸ்து நரகத்திற்குச் சென்று, அங்கு சிறையிலிருக்கும் ஆவிகளுக்கு உபதேசம் புரிந்தார் என்பதையும் காட்டுவர், அவர் அப்படி ஒன்றும் செய்யவில்லை என்பதையும் காட்டுவர்; யூதர்களெல்லோரும் நரகத்திற்குப் போவார்கள் என்பதையும் காட்டுவர், இல்லை, அவர்களெல்லோரும் மோட்சத்திற்குப் போவார்கள் என்பதையும் காட்டுவர்; பைபிளில் சொல்லப்பட்ட அதிசயங்களெல்லாம் செய்து காட்டப்பட்டன என்பதையும் காட்டுவர், அவைகளில் சில செய்து காட்டப்படவில்லை, ஏனென்றால், அவை சிறுபிள்ளைத்தனமாகவும், முட்டாள்தனமாகவும், மடத்தனமாகவும் இருக்கின்றன என்பதையும் காட்டுவர்; பைபிளிலுள்ள எல்லாப் பகுதிகளும் கடவுளால் சொல்லப்பட்டன என்பதையும் காட்டுவர், அவைகளில் சில கடவுளால் சொல்லப்படாதவை என்பதையும் காட்டுவர்; செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் தனித்தனியாகப் பிரித்துக் காணும்போதும், ஒரே பொதுவான தீர்ப்பு இருக்கவேண்டும் என்பதையும் காட்டுவர், பொதுப்படையான தீர்ப்பு என்று ஒருபொழுதும் இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதையும் காட்டுவர்; ரொட்டித்துண்டும் திராட்சை ரசமும் கடவுள் சதையாகவும் குருதியாகவும் மாறுகின்றன என்பதையும் காட்டுவர், அவைகள் அப்படி மாறவில்லை என்பதையும் காட்டுவர்; கடவுளின் தந்தை—மகன்—பூதம் ஆகிய முத்தன்மையுருவம் படைத்தவர் என்பதையும் காட்டுவர், கடவுளுக்குச் சதையோ, இரத்தமோ இல்லை என்பதையும் காட்டுவர்; பாபங்களைக் கழுவுமிடம் ஒன்று உண்டு என்பதையும் காட்டுவர், அப்படி ஒரு இடமும் இல்லை என்பதையும் காட்டுவர்; 'ஞானஸ்நானம்' செய்யப்படாத குழந்தைகள் அழிந்துபடும் என்பதையும் காட்டுவர், அவைகள் காப்பாற்றப்படும் என்பதையும் காட்டுவர்; சீடர்களின் கோட்பாட்டை நாம் நம்பவேண்டும் என்பதையும் காட்டுவர், சீடர்கள் ஒரு கோட்பாட்டையும் ஏற்படுத்தவில்லை என்பதையும் காட்டுவர்; புனித பூதந்தான் கிருஸ்துவின் தந்தையாகும்

என்பதையும் காட்டுவர், ஜோஸப்பே கிருஸ்துவின் தந்தையாவார் என்பதையும் காட்டுவர்; கடவுள் விரோதிகள் கொல்லப்படவேண்டும் என்பதையும் காட்டுவர், தீமையை நீங்கள் எதிர்க்கக்கூடாது என்பதையும் காட்டுவர்; நம்பாதவர்களை நீங்கள் கொல்லவேண்டும் என்பதையும் காட்டுவர், உங்களுடைய பகைவர்களிடம் நீங்கள் அன்பு காட்டவேண்டும் என்பதையும் காட்டுவர்; நீங்கள் நாளைக்கு ஒன்று வேண்டுமே என்று எண்ணக்கூடாது என்பதையும் எடுத்துக்காட்டுவர், தொழில் நடத்திச் சம்பாதித்துச் சேர்ப்பதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும் என்பதையும் காட்டுவர்; உங்களிடத்திலுள்ளதைக் கேட்பவர்களுக்கெல்லாம் கொடுங்கள் என்பதையும் காட்டுவர், தனது வீட்டுக்கு வேண்டியதைச் சேர்த்துக் கொள்ளாதவன், மதாதிரியைக் காட்டிலும் தாழ்ந்தவன் என்பதையும் காட்டுவர்!

இந்த எல்லாக் கோட்பாடுகளையும், இந்த எல்லா முரண்பாடுகளையும் பாதுகாக்கவேண்டி, ஆயிரக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன; இலட்சக்கணக்கான விரிவுரைகள் ஆற்றப்பட்டிருக்கின்றன; கணக்கற்ற வாள்கள் குருதியில் தோய்த்தெடுத்துச் சிவப்பாக்கப்பட்டிருக்கின்றன; ஆயிரமாயிரம் இரவுகள், மாறுபட்டவர்களை எரித்த கொள்ளிக் கட்டைகளின் தீயொளியால், வெளிச்சமாக்கப்பட்டிருக்கின்றன!

பல நூற்றுக்கணக்கான விளக்கவுரைக்காரர்கள், வெளிப்படையாகத் தெரியக்கூடியவைகளைத் தத்துவார்த்தம் பொதிந்தனவாகவும், ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்தனவாகவும் செய்து காட்டுகிறார்கள். நாட்களையும், பெயர்களையும், எண்களையும், வழிவழிமுறைப் பட்டியலையும், மனித அறிவுக்கு எட்டாதனவாகக், கடவுள்தன்மை நிறைந்தனவாக அவர்கள் ஆக்கிக் காட்டியுள்ளார்கள். அவர்கள், கவிக் கற்பனையை மிகச் சாதாரண நிலைமைகளாகவும், கட்டுக்கதைகளை வரலாறுகளாகவும், கற்பனை உருவங்களை முட்டாள்தனமானவையும் நடக்க முடியாதனவும் ஆன உண்மைகளாகவும் செய்துள்ளார்கள். அவர்கள் புராணக்கதைகளோடும் அசரீரிவாக்குகளோடும் கடவுள் காட்சிகளோடும் கனவுகளோடும், ஏமாற்றுக்களோடும் தவறுகளோடும், கற்பனைச் செய்திகளோடும் அதிசயங்களோடும், அறியாதவர்களின் தவறுகளோடும் பைத்தியக்காரர்களின் கூற்றுக்களோடும், நோய்கொண்டவரின் உளறல்களோடும் மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். கோடிக்கணக்கான புரோகிதர்களும், போதகர்களும் இந்தக் கடவுளருளிய நூலில் பல அதிசயங்களைத் தாங்களாகவே சேர்த்துள்ளார்கள்; விளக்கங் கொடுப்பதன் மூலமும், முட்டாள்தனத்தின் அறிவுடைமையைக் காண்பிப்பதன் மூலமும், அறிவுடைமையின் முட்டாள்தனத்தைக் காண்பிப்பதன் மூலமும், கொடுமையின் அருள்திறத்தைக் கூறுவதன் மூலமும், நடக்கமுடியாதவைகளின் நடக்கக்கூடிய தன்மையை விளக்குவதன் மூலமும் பற்பல அதிசயங்களைப் புதிதாகச் சேர்த்துள்ளார்கள்.

மதவாதிகள் பைபிளை ஒரு ஆண்டையாகவும், மக்களை அவரின் அடிமைகளாகவும் ஆக்கினார்கள். இந்த நூலை வைத்துக்கொண்டு அவர்கள் அறிவின் பல்வேறு திறங்களையும், மனிதனின் இயற்கையான மனிதத்தன்மையையும் அழித்துவிட்டார்கள். இந்த நூலை வைத்துக்கொண்டு, அவர்கள், மனித இதயங்களிலிருந்த பரிவைப் போக்கிவிட்டார்கள்; நீதியும் நேர்மையும் கொண்ட கருத்துக்களையெல்லாம் தாழ்த்திவிட்டார்கள்; அச்சம் என்னும் இருட்டறையில் மனித உயிர்களை சிறை அடைத்துவிட்டார்கள்; நாணயமாக ஐயப்படுவதைக் குற்றம் என்று செய்துவிட்டார்கள்!

அச்சத்தின் காரணமாக, இவ்வுலகம் ஏற்ற துன்பங்களின் அளவைச், சிந்தித்துப் பாருங்கள்! மனங்குழம்பிய வெறியர்களாக, விரட்டப்பட்ட கோடிக்கணக்கான மக்களை, எண்ணிப் பாருங்கள்! பயங்கரமானவைகளாகத் தீட்டிக் காட்டப்பட்ட இரவுகளைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பாருங்கள்; அச்சமூட்டும் பிசாசுகளாலும், பறந்துகொண்டும், ஓடிக்கொண்டும், ஊர்ந்துகொண்டும் இருந்த பேய்களாலும் படமெடுத்துச் சீறி எழும் பாம்புகளாலும், கொடூரமான எரியும் கண்களோடு உருவமற்று விளங்கிய கொடிய பிசாசுகளாலும் நிரப்பப்பட்ட இரவுகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்!

இறப்பைப் பற்றி அச்சம், கால எல்லையற்ற துன்பத்தைப் பற்றிய அச்சம், நரக நெருப்பிலும் நரகச் சிறையிலும் என்றென்றும் போட்டுப் பழிவாங்குவதுபற்றிய அச்சம், நீங்காத நாவறட்சிபற்றிய அச்சம், நீங்காத வருத்தம்

பற்றிய அச்சம், செருமுதலும் பெருமூச்செறிதலும் பற்றிய அச்சம், வலி தாங்காமல் கதறும் கூச்சல்பற்றிய அச்சம், எல்லையற்ற வலியினால் முணுமுணுப்பது பற்றிய அச்சம் ஆகிய பல வேறு வகை அச்சங்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்!

கெட்டிப்பட்ட இதயங்கள், உடைந்த நெஞ்சுகள், இழைக்கப்பட்ட கொடுமைகள், தாங்கிக்கொள்ளப்பட்ட வேதனைகள், இருட்டடையச்செய்யப்பட்ட வாழ்க்கைகள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்!

கடவுள் அருளியதாகச் சொல்லப்படும் இந்த பைபிள், திருத்தவ உலகத்திற்கு ஒரு சீர்கேடாக இருந்துவருகிறது, இருக்கிறது; இது கடவுளருளியதாகக் கருதப்படும் காலம் வரையிலும், அப்படியேதான் இருந்தீரும்!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,,	0—4—0	0— 5—0

சித்தூர் மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள்

பொதட்டூர்ப் பேட்டையில் நடைபெறும்

10-7-54 சனி — **சமூக மாநாடு**

தலைவர்: அ. பொன்னம்பலனார்

துவக்குபவர்: கே. ஆர். இராமசாமி

11-7-54 ஞாயிறு — **அரசியல் மாநாடு**

தலைவர்: ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

துவக்குபவர்: இராம. அரங்கண்ணல்

முதல்நாள் இரவு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் "இன்பக்கனவு" நாடகமும்

இரண்டாவது நாள் இரவு நடிப்புக் கலைஞர் எஸ். எஸ். இராஜேந்திரன் குழுவினர் நடிக்கும் "சந்திரமோகன்" நாடகமும் நடைபெறும்

இன்னிசை விருந்து: ஜி. கஸ்தூரி, பி. கே. முருகேசன்

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணாவும், கழக முன்னணிச் சொற்பொழிவாளர்களும் கலந்துகொள்வர்.

இரண்டு நாட்களுக்கும் நாடகங்கள் உள்பட கட்டணம் ரூ. 5, 3, 1½

பெண்களுக்கு அணா 8. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தனி டிக்கட் அணா 8.

வ. கு. தலைவர்: ஏ. டி. கே. இராமசாமி

செயலாளர்கள்: என். எஸ். கே. கணேசன், எஸ். கேசவன்

தொ. ப. தலைவர்: இ. எம். கோதண்டபாணி

குறிப்பு: பொதட்டூர்ப் பேட்டைக்குச் செல்ல அரக்கோணம், திருத்தணி, நகரி, பள்ளிப்பட்டு, சோளிங்கபுரம் புகைவண்டி நிலையங்களிலிருந்து பஸ் வசதி உண்டு.

தொலையறிவிப்பி

'கட்', 'கட', 'கட்-கட', 'கட-கட்-கட', 'கட்-கட-கட்', 'கட்-கட்-கட்', 'கட-கட-கட'

என்பனபோன்ற ஒலிகள் உலக மொழியாக நின்று, உலகின் ஒரு மூலையிலுள்ளோரிடத்திலுள்ள செய்தியை, உலகின் மற்றோர் மூலைக்குக் கொண்டுசெல்லும் என்ற அதிசயத்தை நூற்றிப்பத்து ஆண்டுகளுக்கு முன்னால் உலகத்தோர் அறியமாட்டார்கள். 1944-ம் ஆண்டு மே திங்கள் 24-ம் நாள்தான் தொலையறிவிப்பி (Telegraph) கண்டுபிடிக்கப்பட்டதின் நூறாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. 1844 மே 24-ம் நாள் தான் முதன் முதல் தொலையறிவிப்பியின்மூலம் செய்தி ஒலி செய்யப்பட்டது. பன்னிரண்டு ஆண்டுகள் ஓயாது உழைத்த சாமுவேல் பின்லே பிரீஸ் மோர்ஸ் (Samuel Finlay Breese Morse) என்ற அமெரிக்கர்தான் இந்த வியப்புக்குரிய கருவியை உலகோர் மகிழக் கொடுத்தார். அந்த வரலாற்றை நம்மில் எவ்வளவு பேர்கள் அறிந்திருக்கப்போகிறோம்?

ஓரிடத்திலிருந்து தொலைவிலுள்ள மற்றோரிடத்துக்குச்செய்தி அறிவிப்புச் செய்தல் என்பது மனித சமுதாயத்திடம் மிகப் பழங்காலந் தொட்டு இருந்துவரும் இன்றியமையாத் தேவைகளில் ஒன்றாகும். ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்குச் செய்தியை அறிவிக்க, உலகோர் எவ்வளவோ முறைகளைக் கையாண்டிருக்கின்றனர். உடனுக்குடன் செய்தியை மிகத்தொலைவில் அறிவிக்க சில அடையாளக் குறிப்புகளை மேற்கொண்டிருந்திருக்கின்றனர். பறையை ஒவ்வொரு விதமாக ஒலிப்பதை, ஒவ்வொருவித செய்திக்கு அடையாளக் குறிப்பாகக் கொண்டு, ஓரிடத்தில் ஒரு பறை ஒருவித ஒலியைக் கிளப்ப, அந்த ஒலியைச் சிறிது தொலைவிலுள்ள வேறோர் பறை ஒலிக்க, அதனைத் தொடர்ந்து மற்றொன்று ஒலிக்க இப்படியாகக் குறிப்பிட்ட செய்தி சேரவேண்டிய இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டது. ஓரிடத்தில் கிளப்பப்படும் புகையை, குறிப்பிட்ட செய்தியின் அடையாளக் குறியாகக்கொண்டு, அதுபோலவே கண்ணுக்கெட்டிய தொலைவில் புகையைக் கிளப்பி, இப்படியாகத் தொடர்ந்து புகையை கிளப்பிக் கிளப்பிக் குறிப்பிட்ட இடத்திற்குக் குறிப்பிட்ட செய்தி கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டது. மலை முகட்டுக்கு முகடு தீச்சுடர் கொளுத்திக்காட்டப்பட்டு, அதன்மூலம் குறிப்பிட்ட செய்தி, நீண்ட தொலைவுக்கு அப்பால் கொண்டுபோய் உணர்த்தப்பட்டது. ஒளிக்கற்றைகளை இரவில் வான வெளியில் தொடர்ச்சியாக ஆட்டுவதன் மூலமும் செய்தி தொலைவான இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டது. பகலில் ஞாயிற்றின் கதிர்களைத் தொடர்ச்சியாக எதிர் ஒளிக்கச் செய்வதன் மூலமும் செய்தி மிகத் தொலைவிற்கு அனுப்பப்பட்டது. மிகத் தொலைவான இடங்களுக்குச் செய்தியைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கான வழிமுறைகளை, மனிதன் நூற்றாண்டுக்கு நூற்றாண்டு புதிதுபுதிதாகக் கண்டுபிடித்துக்கொண்டே வந்திருக்கிறான்.

பதினெட்டாவது நூற்றாண்டில், மேரியா எட்ஜ்வொர்த் (Maria Edgeworth) என்ற நாவலாசிரியரின் இரண்டு சகோதரர்களும், தந்தையாரும் சண்டைக் கப்பல்களின் காற்றாடி இதழ்களில் அடையாளக் குறிகளிட்டு, அவற்றினைக்கொண்டு, கப்பல்களின் நிலைமையைத் தெரிந்துகொள்ள ஏதுவாக்கினர். பிறகு காம்பில் (Gamble) என்பவர், கப்பலில் பெரிய கம்பத்தை நட்டு அதில் செய்தி அறிவிப்புப் பலகைகளைப் பொருத்தி, அவற்றின் மூலம் அடையாளச் செய்தியை உணர்த்திட உதவி செய்தார். புகைவண்டி நிலையங்களிலுள்ள கைகாட்டிப் போன்ற அடையாளக் குறிகளை ஹோம் பாப்ஹாம் (Home Popham) என்பவர் கண்டுபிடித்தார்.

இவைகளுக்கெல்லாம் முன்பே கலிலியோ (Galileo) என்ற பேரறிஞன், கி. பி. 1632-ல், காந்த ஊசியை அடையாளக்குறியாகக்கொண்டு செய்திகளை அறிவிக்கும் வழிவகைகளைக் காணலாம் என்று கருதினார். ஆனால் மின்சார காந்தம், வில்லியம் ஸ்டர்ஜன் (William Sturgeon) என்பவரால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்படும் காலம் வரையில், எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை. 1825-லும் அதற்குப் பிறகும் மின்சாரக்காந்தம் பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டதற்குப் பின்தான், தொலையறிவிப்பிக் கருவி தோற்றங் கொள்வதற்கான கருத்து உருக்கொண்டது.

பிரான்சை விட்டுப் புறப்பட்டு நியூயார்க் நகரை நோக்கி சல்லி (Sully) என்ற கப்பல் வந்துகொண்டிருந்தது. அதில் ஒரு இளம் ஓவியர் ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டுத் தன் தாய்நாட்டிற்குத் திரும்புபவர்— ஒருநாள் தம் நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். சாமுவல் பின்லே பிரீஸ் மோர்ஸ் இளம் ஓவியர் என்றாலும், சிறந்த வாழ்வு அவருக்கு எய்தியிருந்தது. அவர் முப்பத்தைந்து வயதிலேயே நியூயார்க் பல்கலைக் கழகத்தில் பொருள்கள் பற்றிய மாதிரிப்படங்கள் வரையும் ஓவியப் பேராசிரியராகத் திகழ்ந்தார். கப்பலில் அவர் புரிந்துகொண்டிருந்த உரையாடல் அவர் வாழ்வையே மாற்றும், ஏன் உலகின் வாழ்வையே மாற்றும் என்பதை அவர் அறியமாட்டார்.

மோர்ஸுடன் டாக்டர் ஜாக்ஸன் என்பவர் உரையாடிக் கொண்டிருக்கும்போது, மின்சார காந்தத்தின் வியப்புக்குரிய விளைவுகள் பற்றியும், காந்தம் ஏறிய இரும்பில் சுற்றப்படும் கம்பி வழியாக மின்சாரம் எப்படிப் பாய்ந்து செல்கிறது என்பதுபற்றியும் விளக்கமாகவும், வேடிக்கையாகவும் எடுத்துக் கூறிக்கொண்டிருந்தார்.

“கம்பியின் வழியாக மின்சாரம் பாய்வதற்கு எவ்வளவு நாழி ஆகிறது?” என்று மோர்ஸ் கேட்டார்.

“உடனே பாய்ந்துவிடுகிறது” என்று விடையிறுத்தார் ஜாக்ஸன்.

பெஞ்ஜமின் பிராங்லின் என்ற அறிவியல் அறிஞர், பிலடெல்பியா என்ற இடத்திலுள்ள ஒரு ஆற்றின் குறுக்கே கம்பியைப் போட்டு விட்டு, ஒரு பக்கத்தில் மின்சாரத்தைப் பாய்ச்ச, அது எவ்வாறு உடனே மற்றொரு கரையில் நெருப்புப் பொறிகளைப் பறக்கும்படி செய்கிறது என்பதை விளக்கிக் காட்டினார் என்பதை டாக்டர் ஜாக்ஸன் மிக அழகாகவும், மோர்ஸ் உள்ளத்தில் பதியுமாறும் எடுத்துக்கூறினார். இந்தச் செய்தியைக் கேட்டவுடன், மோர்ஸின் உள்ளத்தில் ஏதோவொரு கருத்து கருக்கொள்ளத் தொடங்கிற்று. இத்தாலியில், போர்ப்படைகள் தங்களுக்குள் செய்திகளைப் பரிமாறிக்கொள்ள மின்சாரப் பொறிகளை எப்படி அடையாளக்குறிகளாக வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதை அவர் நேரில் கண்டறிந்திருந்தார். பிறகு அவர் தமது அறையில் தனித்திருக்கும்போதெல்லாம் தொலையறிவிப்பி பற்றிய மாதிரிப் படங்களைப் போட்டுப் போட்டுப் பார்க்கத் தொடங்கினார், ஒரு குறிப்பேட்டில்.

அவர் கப்பலைவிட்டு இறங்கும்போது, அக் கப்பலின் மாலுமியிடம், எப்பொழுதாவது அந்த மாலுமி தொலையறிவிப்பி பற்றிக் கேள்விப்பட நேர்ந்தால், அந்தக் கருவியைக் கண்டு பிடிப்பதற்கான கருத்துத் தோற்றம் சல்லி என்ற கப்பலில் தோன்றியதுதான் என்பதை உறுதி செய்துகொள்ளலாம் என்று கூறினார்.

அவர் நியூயார்க் நகரைப் போய்ச் சேர்ந்ததும், ஓவியக்கலையை விட்டுவிட்டு, தொலையறிவிப்பியைக் கண்டுபிடிப்பதிலேயே காலத்தைக் கடத்திவந்தார். அவர் ஏதாவது படங்கள் வரைந்தாரென்றால் அல்லது மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார் என்றால், தமது ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கான பொருளை ஈட்டுவதற்கேயாகும். இப்படிப் பட்ட முறையில் ஒரு ஓவியர் தொழில் நடத்தி வந்தால், தொழிலில் வெற்றியடையமுடியாது என்பதை யாவரும் நன்கு அறிவர். அதனால் மோர்ஸ் நாளடைவில் மிக்க ஏழையாகிவிட்டார். ஒரு சிறிய அறையில் குடியிருந்துகொண்டு வெறும் தேத்தண்ணீர், பிஸ்கோத்து ஆகியவைகளிலேயே காலந்தள்ளி வந்தார். தனிப்பட்ட முறையில் ஏழை ஓவிய ஆசிரியராக இருந்து கொண்டு, தமது ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். தாம் செய்யும் மாதிரிக் கருவிக்குத் தேவையான பகுதிகளை, அவை எங்கெங்கு கிடைக்குமோ அங்கெல்லாம் பொறுக்கிச் சேர்த்துக்கொண்டார். உடைந்த படங்களின் இரும்புச் சட்டங்கள், குப்பைத்

தொட்டியில் கிடக்கும் இரும்புத் துண்டுகள், தெருவோரத்தில் கிடக்கும் இரும்புக் கம்பிகள், உடைந்துபோன கடிகாரத்தின் சக்கரங்கள் ஆகியவற்றைப் பொறுக்கிச் சேர்த்துக்கொள்வார். ஒருபொழுது மோர்ஸ் அவருடைய மாணவன் ஒருவனைப் பார்த்து, "நீ எப்பொழுது படிப்புச் சம்பளம் கொண்டுவந்து தரப் போகிறாய்?" என்று கேட்டாராம்; அதற்கு அவன் "அடுத்த வாரம்!" என்று பதிலிறுத்தானாம்; அதற்கு மோர்ஸ், "அதற்குள் நான் பட்டினிச் சாவால் இறந்தொழிந்துவிடுவேனே!" என்று கூறினாராம். அந்த அளவுக்கு ஏழ்மையும், வறுமையும் அவரைப் பிய்த்துப் பிடுங்கின.

இறுதியாக, ஓய்வு ஒழிவில்லாமல் அரும்பாடுபட்டதன் விளைவாக மோர்ஸ் தொலையறிவிப்பி ஒன்றைக் கண்டுபிடித்தார். அதனை யாவர்க்கும் விளக்கிக்காட்ட வாஷிங்டன் நகருக்கு எடுத்துச் சென்றார். வாஷிங்டனுக்கும் பால்டிமோருக்கும் இடையில் தொலையறிவிப்பிக் கம்பி இழுப்பதற்கு 30,000 டாலர்கள் உதவி அளிக்கும்படி அரசியலாரைக் கேட்டார். மோர்ஸ் கப்பலில் கண்ட கனவு நனவாயிற்று. கம்பியின் ஒரு முனையில் ஒரு ஆணியை அழுத்தினால், அந்த அழுத்தம் மின்சாரத்தால் கம்பியின் மற்றொரு முனைக்குக் கொண்டுபோகப்பட்டு வெளிப்படுத்தப்படுவது அக்கருவியின் முக்கிய வேலையாகும். 'கட்', 'கட' என்ற இரண்டுவித ஒலிகளை மட்டும் வைத்துக்கொண்டு, அவைகளைத் தனித்தும், கூட்டியும் பல்வேறு எழுத்துக்களைக் குறிக்கும் அடையாளக் குறிகளாகக் கொண்டு ஒரு உலகமொழி அவரால் வகுக்கப்பட்டது. 'கட்', 'கட'— இரண்டு ஒலிக்குறிப்புகள்தாம்!-ஆனால் அவற்றால் பெறப்படும் பலன் அளப்பறியதாகும்.

•மோர்ஸ் தொலையறிவிப்பிக் கருவியைக் கண்டுபிடித்துவிட்டு, நாட்கள், வாரங்கள், மாதங்கள் பல காத்திருந்தார்.

அந்த நேரத்தில் தம் நிலை குறித்து அவர் எழுதும்போது, "நான் யாரிடத்திருந்தும் அனுதாபமோ, உதவியோ பெறமுடியவில்லை. இரண்டு ஆண்டுக் காலமாக நான் எனது நேரத்தையெல்லாம், பொருளையெல்லாம் செலவிட்டேன்; வசதியான வாழ்வின்பத்தையெல்லாம் இழந்தேன்; உணவைக்கூட இழந்தேன். நான் சீரழிக்கப்பட்டுவிட்டேன். எங்கிருந்தாயினும் ஏதாயினும் உதவி கிடைக்காவிட்டால், நான் எனது கண்டுபிடிப்பைக் கைவிடவேண்டியதுதான். பலகோடி மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியதான, எனது கண்டுபிடிப்புப் பற்றிய அறிவுதான் என்னை உயிரை விடச் செய்யாமல் காப்பாற்றிவருகிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

1843 மார்ச்சுத் திங்கள்—அவரிடம் ஒரு டாலர்கூட இல்லை. அமெரிக்கப் பாராளுமன்றம் கூடிக் கலைகிறநேரம் வந்துவிட்டது; மோர்ஸின் திட்டத்திற்கு ஆதரவுகிடைப்பதாகத் தெரியவில்லை. பிறகு பாராளுமன்றக் கூட்டத்தின் கடைசி நேரத்தில், தொலையறிவிப்பி நிலை நாட்டுவதற்கான தொகையளிக்கும் மசோதா, பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

உடனே மோர்ஸ் வாஷிங்டனுக்கும் பால்டிமோருக்கும் இடையிலுள்ள நாற்பது மைல் அளவுக்குத், தொலையறிவிப்பிக் கம்பி இழுக்கக் கம்பங்கள் நாட்டும் பணியில் ஈடுபட்டார். 1844 மே 24-ம் நாள் இறுதியாகப் பிணைக்கப்படவேண்டிய கம்பியும் பிணைக்கப்பட்டது. மோர்ஸின் நண்பரும், உதவியாளருமான ஆல்பெர்ட் வைல் என்பவர் தம் குழுவினரோடு வாஷிங்டன் முனையில் நின்றுகொண்டார். மோர்ஸ் பால்டிமோர் முனையில் நின்றுகொண்டு, தொலையறிவிப்பியின் ஆணியை அழுத்தத் தயாராக இருந்தார். சுற்றிலும் உள்ளவர்களைப் பார்த்து "நான் என்ன சொல்லவேண்டும்?" என்று கேட்டார்.

கூட்டத்திலிருந்த ஒரு பெண், "கடவுள் என்ன அற்புதஞ் செய்துள்ளார்!" என்ற செய்தியை அனுப்பும்படி கூறினாள். உடனே "கட்-கட-கட; கட்-கட்-கட்-கட்; கட்-கட; கட;" என்பதுபோன்று ஒலிகள் எழுப்பப்பட்டு, மின்சாரத்தால் கம்பிவழியே பாய்ச்சப்பட்டன. வாஷிங்டனில் வைலால் பதிவுசெய்யப்பட்டு, அந்தச் செய்தி படித்துக்காட்டப்பட்டது.

இரண்டு நாட்கள் வரையில் அதன் அருமையைப் பொதுமக்கள் உணர்ந்துகொள்ளவில்லை. அந்தச் சமயத்தில் வாஷிங்டனில், ஜனநாயகக் கட்சியின் மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில், பால்டிமோரைச் சேர்ந்த சிலாஸ் ரைட் (Silas Wright) என்பவர் கட்சியின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தச் செய்தி வைலால் மோர்ஸுக்குத் தொலையறி

புலவர் கடமை

இரா. நெடுஞ்செழியன்.

உயர்தனிச் செம்மொழி என்று போற்றப் படுவது! இலக்கண இலக்கியச் செறிவுடையது! பழம் பெருங் காலந்தொட்டு எழில் குன்றாது இயங்கிவருவது! உள்ளக் கருத்தை ஒலிக்குறிப்பினால் உணர்த்தத் தொடங்கிய காலமுதல் இயற்கையோடு இயைந்து வளர்ந்து வருவது! கழகமிருந்து போற்றிக் காப்பாற்றப் பட்டு வளர்க்கப்பட்டு வந்தது! இதனுடன் தோன்றிய ஏனைய, வழக்காறு ஒழிந்து காணப் படவும், இதுவொன்று மட்டுமே இதுகாறும் உயிருடன் நின்று நிலவும் பெற்றியமைந்தது என்று மொழிநூல் வல்லுநர் பலராலும் போற் றப்பட்டு வருவது! என்று இவ்வாருகப் போற் றிப் புகழப்படும் நம் தாய்மொழியாம் தமிழின் இற்றைக்கால நிலையை உய்த்துணரவேண்டியது இன்றியமையாததாகிறது.

ஒரு காலத்தில் வளர்ந்து செழித்திருந்த தமிழ், பல்வேறு ஏதுக்களால் தாக்குண்டு, செழுமை குன்றி, வளர்ச்சியற்ற நிலையை எய்தியது என்பதை வரலாறு நமக்கு உணர்த்தி யுள்ளது. தடைப்பட்டுத் தேங்கிய நிலையை எய்திய தமிழ், இன்னும் அதே நிலையில்தான் இருக்கிறது. வளரவில்லை என்பதைத் தமிழ்ப் புலவர்கள் சிறிது பொழுதாயினும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

பல்வேறு துறைப்பட்ட உலகியல் அறிவு பரந்தோங்கிப் பார்முழுதும் ஆட்சி செய்து கொண்டிருக்கும் இக்காலத்தில், மக்கள் தம் உள்ளத்தில் ஊறி எழும் கருத்துக்களை நீரருவியின் வீழ்ச்சிபோல் வெளியில் கொட்டுவதற்கு ஏற்ற வண்ணம் தமிழ் மொழிவளம் பெறவில்லை; வளரவில்லை; வளர வழியமைக்கப் படவில்லை. எடுத்துக்காட்டாக, ஆங்கில மொழியை எடுத்துக்கொண்டால், அது சொற் செறிவுடையதாய் எண்ணிய கருத்துக்களை எழிலுடைச் சொற்களாலே விளக்கிக் காட்டும் அளவுக்கு வளம்பெற்றிருக்கிறது. தமிழ் தோன்றிய காலத்திற்குப் பிறகு பல்லாயிரம் ஆண்டு கழிய, பின் தோன்றிய ஆங்கிலம் வளர்ச்சியுற்று விளங்கவும், தமிழ் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வளர்ந்த ஒரு நிலையிலேயே நிற்கவுமான ஏது என்ன? ஆங்கில இலக்கியப் புலவர்கள் அம்மொழியினை வளர்க்கச் செய்த சில நூற்றாண்டுகளாக எடுத்துக்கொண்ட

யறிவிப்பியின் மூலம் அனுப்பப்பட்டது; மோர்ஸ் ரைட்டுக்கு இச்செய்தியை அறிவித் தார்; ரைட் அந்தப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்தார்; உடனே மோர்ஸ் அச்செய்தியைத் தந்தியடித்தார்; சில நிமிட நேரத்திற்குள் அச் செய்தி மாநாட்டினர்க்கு அறிவிக்கப்பட் டது.

தொலையறிவிப்பியினால் ஏற்பட்டுள்ள நன்மை அளவிடற்கரியதாகும். ஒருபொழுது ஏழையாகவும், ஒதுக்கப்பட்டவராகவும் இருந்த மோர்ஸ் மிக்கப் புகழுக்கும் பெருமைக் கும் உரியவரானார். அரசர்களும், அரசிகளும், பேரரசர்களும், நாட்டின் தலைவர்களும் அவருக்குப் பட்டங்களும், பரிசுகளும் ஏராளமாக வழங்கினர். பத்து ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து அவருக்கு ஒரு நிதி அளிப்புச் செய்தன.

மோர்ஸ் கண்டுபிடித்த சில மாதத்திற்குள் உலகெங்கும் தொலையறிவிப்பிக் கம்பிகள் ஊரோடு ஊரை, நாட்டோடு நாட்டை, கண்டத்தோடு கண்டத்தை இணைக்கும் பற்றுக் கோடுகளாகிவிட்டன. நாளடைவில் மிகப்பெரு முயற்சியின் விளைவாகக் கேபிள் கம்பிகள் கடலில் இழுக்கப்பட்டுக் கண்டத்தோடு கண் டம் இணைக்கப்பட்டன.

நீண்ட தொலைவுக்கிடையே வாழும் இருவர் தங்களுக்குள் செய்தியைச் சுருக்கமாகவும், எளிதாகவும், எற்றமுறையிலும் அடிவித்துக் கொள்ள தொலையறிவிப்பி உற்ற துணையாக இருந்து அருர்பணி ஆற்றிவருகிறது. உலக மக்களை மகிழ்ச்சிப் பெருங்கடலில் ஆழ்த்திய பெருந்தகையாளர்களில் மோர்ஸ் ஒருவராவார். வாழ்க அவர் பெயரும், புகழும்!

பெருமுயற்சி அந்த வெற்றியினை அதற்குக் கொடுத்தது. ஆங்கில இலக்கியப் பெருமக்கள் புதிய புதிய கருத்துக்களை விளக்கப் புதிய புதிய சொற்களைச் சேர்த்து வளர்த்துக் கொண்டே வந்தனர். ஆங்கிலம் இயற்கையோடு இயைந்து வளர்ந்து வராதமொழியாய் இருந்தமையின் அதனிடத்து வேர்ச்சொற்கள் இல்லை. புத்தம் புதிய கருத்துக்களை விளக்கச் சொற்கள் அகப்படாதபொழுது வேற்று மொழிச் சொற்களையாவது எடுத்து ஆளவேண்டிய இன்றியமையாத நிலையில் ஆங்கில இலக்கியப் பெருமக்கள் இருந்தனர். அவர்கள், தம் தாய்மொழியை வளர்த்தனர்; ஆகவே அது வளர்ந்தது. தமிழ்ப்பெருமக்கள் தமிழை வளர்க்கவில்லை. ஆகவே அது வளரவில்லை. ஆனல் ஆங்கிலர் தம் தாய்மொழியைக் காப்பாற்றி வந்தார்கள்; ஆகவே அது வளர்ச்சியுற்று இருக்கிறது—தமிழ் வளரவில்லை; இருக்கிறது.

ஆங்கிலத்தைப் போலத் தமிழ் வேர்ச்சொற்கள் பஞ்சமுடையதல்ல. இருந்தும் ஆங்கிலம் வளர்ந்தது; தமிழ் தாழ்ந்தது. இடையில் பல நூற்றாண்டுகளாகத் தடையேற்படாமல் இருந்திருந்தால், புத்தம் புதிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தத் தமிழ் பயன்படுத்தப்பட்டிருக்கும். ஆங்கிலத்தைப் போல் பிறன் மொழிச் சொற்களைக் கடன் வாங்கவேண்டிய நிலையில்லாமல், தமிழில், வேர்ச்சொற்களைக்கொண்டே புத்தம் புதிய சொற்களை உண்டாக்கிக்கொள்ள [illegible] இயலும். எடுத்துக்காட்டாக 'சைகிள்' என்ற ஆங்கிலப் பெயருடைய பொருள் தமிழ் நிலத்தில் வந்திறங்கும்போது, அதனைச் சுட்டிக்காட்டுவதற்குரிய தமிழ்ச் சொல் இல்லாமலிருப்பது இயற்கையே. அதன் வடிவு, பண்பு, இயக்கம் முதலியன கண்டறிந்து அதற்கேற்ற தமிழ்ப் பெயர் கொடுக்க இயலுமா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது 'ஒற்றைச் சுவட்டு' வண்டி அல்லது 'ஈருருளி' வண்டி என்ற காரணப்பெயரை அதற்குச் சூட்டுவது பொருந்துவதாகும். இந்த முறையில் பெரும்பாலான புதிய பொருள்களுக்குப் புதிய சொற்களை உண்டாக்கவேண்டும். இந்த வேலையைப் புலவர்குழாம் செய்யமுடியும். செய்யவேண்டும். பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் புதிய சொற்களைத் தமிழிலேயே கண்டுபிடிக்க இயலாதவிடத்துத் தமிழ் ஒலிக் குறிப்பிற்கேற்ப அவைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக Pencilin என்ற ஆங்கிலப் பெயரமைந்த புதிய மருந்து ஒன்று இப்பொழுது வந்திருக்கிறது. அதற்கேற்ற தமிழ்ப் பெயரைத் தமிழிலிருந்தே எடுத்தமைத்துக் கொள்வதென்பது எளிமையுடையதல்ல. இத்தகைய நிலையில் 'பென்சிலின்' என்று தமிழில் கொள்வது தவருகாது.

பெரு வழக்குடைய பிறமொழிச் சொற்களுக்கேற்பத் தமிழில் சொற்கள் இருக்குமேயாயின் அவற்றைப் பெரு வழக்குடைய சொற்களாக ஆக்கும் பெரும் பணியை இலக்கிய அறிஞர்கள், மேற்கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாகச் சாதம், ஜலம், சந்தோஷம், க்ஷேமம், போன்ற சொற்களுக்கு மாருக, சோறு, நீர், மகிழ்ச்சி, நலம் போன்ற சொற்களை எடுத்தாளச் சிறிது முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமேயானல் நாளடைவில் மொழி வளர்ச்சியடைய ஏதுவாகும். இயலாதவிடத்துத் தமிழ் ஒலிக்குறிப்பிற்கேற்பப் பிறமொழிச் சொற்களைத் திருத்தியாவது தமிழின் சொல் வளத்தைப் பெருக்கும் துறையில் மற்றவரைக் காட்டிலும் தமிழ்ப்புலவர்கள் இறங்கவேண்டியவராகிறார்கள்.

புதுக் கருத்துக்களைத் தெளிவாக்கும் சொற்களைத் தமிழிலேயோ இயலாதவிடத்துத் தமிழோடு சார்ந்த நிலைபடுத்தியோ தமிழின் சொல் வளத்தைப் பெருக்கத் தமிழ்ப்புலவர்கள் முதற்கண் முன்வரவேண்டும். அரசியலார் உதவி, [illegible] அறிஞர் உதவி, மக்கள் உதவி இந்தத் துறையில் நாளடைவில் பெருகும் வண்ணம் நிலைமை வந்துகொண்டிருக்கிறது. தமிழறிஞர்கள் ஒன்றுகூடவேண்டும். ஒன்றுகூடிப் பேறிஞர்களைக்கொண்ட குழுக்கள் அமைத்து ஆவன செய்ய முற்படவேண்டும். ஏனைய நாடுகளின் இலக்கியப் பேறிஞர்கள் இதனைச் செய்கிறார்கள். ஏன் இங்கு செய்யலாகாது?

பழமைக்கு வளைந்தும், நெளிந்தும், படிந்தும் வாழ்கிறவர்களைத் தவிர்த்துப், புத்துலகம் அமைக்க உணர்ச்சி பெற்று எழுச்சியுற்று விளங்கும் இளம்புலவர்கள்,—தமிழ் ஆர்வம் பொங்கி எழும் இளைஞர்கள்-தமிழை வளர்க்கப், புத்தம் புதிய கருத்துக்களை வளர்க்கப், புதிய பாதையை அமைக்க ஒன்றுகூடித் தீரவேண்டும். 'எல்லார்க்கும் எல்லாம்' என்றிருப்பதான புத்துலகம் நோக்கித் தமிழகத்தை ஈர்த்துச் செல்ல ஏனையோரைக் காட்டிலும் புலவர்கள்

பாடுபடவேண்டும். பழமைக் கருத்தை மாற்றித் தேவையான புதுமைக்கருத்துக்களைச் செந்தமிழ் தேனில் குழைத்து இலக்கிய வட்டிலின் மூலமாக மக்களுக்கு ஊட்டவேண்டும். பாரதியாரும், அவரைவிடச் சிறப்புடைய முறையில் பாரதிதாசனும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளனர். இலக்கியத்தின் போக்கை மாற்ற இலக்கியத்தை வளர்க்க, இலக்கியத்தைப் புதுப்பிக்க இளம் புலவர்களே முன்வாருங்கள்! நாடு உங்களை எதிர்பார்த்து நிற்கிறது! இளைஞர்களால்தான் செயலாற்றும் வழியை மாற்றவோ, வளர்க்கவோ முடியும். அவர்கள் மாற்றியிருக்கிறார்கள். எனவே இளம்புலவர்களும் அவர்களுக்குரிய கடமையைச் செய்தால் தமிழகம் புதிய பாதையில் விரைந்து செல்லும் என்பது திண்ணம்!

வங்கம், தன் தாய்மொழியான வங்காளி மொழியை அரசியல் மொழியாக ஏற்றுக் கொண்டுவிட்டது. அசாமும், ஐக்கிய மாகாணமும் தங்கள் மொழிகளையே அரசியல் மொழிகளாக ஆக்கிக்கொண்டு விட்டன. எனவே தமிழகமும் தன் தாய்மொழியாம் தமிழை அரசியல் மொழியாகக் கொள்ளவேண்டும். அந்த முயற்சி அண்மையில் வெற்றி பெறும்; வெற்றி பெற்றே தீரும். தமிழகப் பாராளுமன்றத்திலிருந்து சிற்றூர் மன்றம் வரையிலும் தமிழே சொல்லாடலாக அமையும், நீதிமன்றங்கள், அலுவலகங்கள், பணிமனைகள், வாணிகக் களங்கள், பல்கலைக் கழகங்கள், அங்காடிகள் ஆகிய எங்கணும் தமிழே முதன் மொழியாக ஒலிக்கப்பெறும். அவற்றிற்கெல்லாம் உரியவாறு தமிழைத் திறனுடையதாகச் செய்யவேண்டிய பொறுப்பு புலவர்களைச் சார்ந்ததாகும். ஆகவே கடமையைச் செய்யப் பெரும் புலவர்கள் புறப்படுவார்களாக!

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு

சியக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

உரிமையாளர்: S. பெத்தண்ணா நாடார்
3037-38, டபீர் குளம் ரோடு,
தஞ்சாவூர்.

அண்டசராசரம்

[இரா. செழியன்]

"என்னடா குப்பு! நோக்கு ஞாபகமிருக்கோ, இல்லியோ! உன் அப்பா செத்துப் போய் ஒரு வருஷமாகலியோ?"

"எப்படி, சாஸ்திரிகளே! மறந்துபோகும். சித்திரைக்குச் சித்திரை, இன்றைக்குப் பதினெட்டாந்தேதி, சரியாக ஒருவருஷம் முடிந்துவிட்டது. எங்களையெல்லாம் தவிக்கவிட்டு அவர் கண்ணை மூடிவிட்டார்."

"பிராப்த காலம் வரும்பொழுது யார் என்ன செய்யமுடியும்? ஆனாலும் இதோ, பாருடா! அவர் உன்னுடைய அப்பா, உன்னைப் பெற்று, வளர்த்து மனுசன்னு விட்டார்! அவரைப்பற்றி நீ நினைத்துக் கவலைப்படனும்."

"அவர் இருக்கிற வரை எந்தக் குறையுமில்லாமல் பார்த்துக்கொண்டோம். கடைசி காலத்தில்கூட, காசு பணம் பார்க்காமல் செலவு செய்தேன். அவர் கஷ்டப்படப் பார்த்து நாங்கள் சும்மாயில்லை. வேண்டியது செய்தோம். ஆனால் பயனில்லாமற் போய்விட்டது."

"அப்படிச் சொல்லாதேடா! செய்த காரியம் பயனில்லாமற் போகாது! ஆனால் அவர் என்ன கஷ்டப்படுகிறாரோ, யார் கண்டது."

"அவர் கஷ்டப்படவேண்டியதெல்லாந் தான் சுடுகாட்டோடு போய்விட்டுதுங்க."

"அவர் இப்போ, படர கஷ்டத்தைப் பற்றிச் சொல்றேன்!"

"இப்போவா? செத்து ஒருவருஷத்துக்கு மேலாயிட்டுதே, சாமி!"

"போடா மண்டு! செத்தவுடன் எல்லாம் தீர்ந்துட்டுதா? செத்த பிறகு இந்த உலகத்தை விட்டுக் கிளம்பினார்."

"எங்கே?"

"பிதுர் லோகத்துக்கு?"

"என் அப்பாவா?"

"உன் அப்பா, உன் தாத்தா எல்லோருந் தான்! செத்தவாளெல்லாம் அந்த லோகத்துக்குப் போறாள்."

"எங்கே, சாஸ்திரிகள் அந்தப் பிதுர்லோகம் இருக்கிறது?"

"தேவலோகத்துக்கெல்லாம் மேலே!"

"அப்படிங்களா?"

"ஆனால் அங்கேகூட கஷ்ட நஷ்டங்களில்லாமலில்லை. புத்ரர்கள் சரியாக் கவனிக்கலையின்னா, அன்ன ஆகாராதிகள் இல்லாம அவாள் கஷ்டப்படுவா!"

"சாப்பாட்டுக் கில்லாமலா? என் அப்பாவா? பசி என்றால் பொறுக்கமாட்டாரே! ஒரு நாழி நேரந் தவறிவிட்டால்கூட களைத்துப்போவாரே!"

"கவலைப்படறது மட்டும் போதாது! காரியத்தைப் பார்க்கணும்."

"என்ன செய்யனும் சொல்லுங்க!"

"அவருக்குப் பிரியமான காய்கறி, பதார்த்தங்கள், வேட்டித் துணிமணிகள் எல்லாவற்றையும் தானமாகக் கொடு! பிராமணோத்தமர்களுக்குக் கொடுக்கிற தானதிவகைகள் பிதுர்க்களுக்குப் போய்ச் சேர்கின்றன."

"அப்படிங்களா?"

"எல்லாம் உன் பிதாவுக்கு நீ செய்யறே! எனக்கு இதில் துளியும் சம்பந்தம் கிடையாது. நீ கொடுக்கிற தான பலன் நேராகப் பிதுர்க்களுக்குப் போய் சேர்ந்துவிடுகிறது. செத்து ஒருவருஷமாச்சே; திவச தினத்தைக் குப்புசாமி மறந்திருப்பானே! திவசம் செய்யாவிட்டால் பிதுர் உலகத்தில் இருக்கிறவாளெல்லாம் எவ்வளவோ அவதிப்படுவா! என்பதை மனசிலே வைத்து உன்கிட்டச் சொல்லவந்தேன்."

"நீங்க சொல்லவில்லை யென்றால் எனக்கு மேலுலகத்தைப் பற்றியும், பிதுர் உலகத்தை

பற்றியும் என்னுங்க தெரியப்போவுது. என்ன தானம் செய்யனுமோ அதை உடனே செய்து விடுகிறேனுங்க!"

"திவசத்துக்கு வேண்டியதையெல்லாம் சொல்றேன், குறிச்சுக்கோ!"

பிதுர் உலகத்திலிருக்கும் தன் அப்பாவுக்காக, இந்தப் பூவுலகத்திலிருக்கும் குப்புசாமி செய்ய வேண்டியதைப் பற்றி, பஞ்சாங்கம் பஞ்சனத சாஸ்திரிகள் ஒரு உபதேசம் செய்தார். தான வகை பற்றி ஒரு பட்டியல் தயாரிக்கச் சொன்னார். குப்பிசாமி கொஞ்சம் காசுபணமுள்ளவன். மளிகைக்கடைச் சொந்தக்காரனுங்கூட. எனவே சாஸ்திரியார் கொடுத்த தானப்பட்டியல் சற்று நீண்டதாகவே இருந்தது. இளம் பிஞ்சுக் கத்தரிக்காயிலிருந்து, ஜரிகைக் கரை போட்ட வேட்டிவரை. திவசத்தின்போது குப்புசாமி பஞ்சனத சாஸ்திரியிடம் கொடுத்தான். பஞ்சனத சாஸ்திரி வாங்கிக்கொண்டாரென்றால், தனக்காக அல்ல, குப்புசாமியின் பிதுர்க்களைத் திருப்திப்படுத்தவே, அவ்வாறு செய்தார்.

செத்த பிறகு ஜீவன் மேலுலகம் போகிறது. இங்கே தரப்படுகிற திவசம் பிதுர்லோகத்துக்குப் பலன் தருகிறது. பிதுர்லோகம் என்பது எங்கேயிருக்கிறது என்றால், இந்த உலகத்துக்கு மேலே, கண்ணுக்கெட்டாத உயரத்தில், மேகமண்டலங்களுக்கு அப்பால் இருக்கிறது. அங்கு செல்லுகிற ஜீவன், அதற்கு நேரும் சங்கடங்கள் அவற்றைத் தீர்க்கும் முறை இவைகளைப்பற்றி புராணங்கள் கூறுகின்றன. அது மட்டுமன்றி, மேலுலகம் போவதற்கு—அதாவது சொர்க்கலோகம் போவதற்கு என்னென்ன புண்ணிய காரியங்கள் செய்யவேண்டுமென்பது பற்றியும் வேதாகம புராணங்கள் கூறுகின்றன.

பிதுர் லோகத்திலிருக்கும் பிதுர்க்களுக்குத் தானம் செய்யும்படி அல்லது சொர்க்கலோகம் போவதற்குச் செய்யவேண்டிய புண்ணிய காரியங்களைப்பற்றி, பஞ்சனத சாஸ்திரிகள் சொன்னதும், ஒன்றும் அறியாத குப்புசாமி, உடனே அதன்படி செய்துவிட்டான். ஆனால் குப்புசாமியைப்போல் உடனே நம்பாமல் சந்தேகங்கள் கிளப்பி, "கொடுக்கப்படுகிற தானம் உண்மையில் பிதுர்லோகத்துக்குப் போகிறதா? அல்லது சாஸ்திரியார் வீட்டுச் சமையற்கட்டுடன் நின்றுவிடுகிறதா?" என்று கேள்வி கேட்க நினைப்பவர்களும்—கேள்வி கேட்பதில்லை—இருப்பார்கள். அத்தகையத் துடுக்குக்காரர்களையும் சாஸ்திரி அம்மா விடுவதில்லை.

"நான் சொல்வதைச் சொல்லிட்டேன். திவசம் கொடுத்தால் கொடு, கொடுக்காவிட்டா போ! உன் பிதுர்க்கள் சங்கடப்படுவாள், சபிச்சுக்கொட்டுவாள்! உனக்குக் கேடு வரும்!"

"தலையா போய்விடும்."

"இப்போ நோக்கு ஒன்னுந் தெரியாது. தானாதி காரியங்களைச் செய்யாதவன், பிதுர்க்களைக் கவனிக்காதவன், வேதாகம புராண முறைகளை மதிக்காதவன், பிராமணோத்தமர்களை தூஷித்தவன்...."

"என்ன நடக்குமாம்!"

"நரகம்தான் கிடைக்கும்."

"நரகமா?"

"ஆமாண்டா! இவ்வளவு பாபக்காரியங்களைச் செய்தால், செத்தபிறகு, யமபடர்கள் இழுத்துப்போய் நரகத்தில் தள்ளுவார்கள், சொல்ல முடியாத கஷ்டம், பொறுக்கமுடியாத தண்டனைகள், கிடைக்கும். எண்ணெய்க்கொப்பரையில் போடுவார்கள், நெருப்புக் குண்டத்தில் தள்ளுவார்கள், முட்களின்மீது எறிவார்கள், பாறைமீது மோதுவார்கள், பாம்பு தீண்டும், தேள் கொட்டும், நாய் கடிக்கும்."

"ஐயோ!"

"ஆனால் உயிர் போகாது, சித்ரவதையால் துடிக்கவேண்டியிருக்கும். புண்ணியகாரியங்களைச் செய்யாதவன், வேத நிந்தனை செய்கிறவன், இந்த நரகத்துக்குப் போகவேண்டும்."

நரகத்தைக் காட்டி சாஸ்திரி பயமுறுத்தினார். நரகத்தின் பயங்கர வர்ணனைகளைக் கேட்கும்போது, முதலில் சந்தேகத்துடன் கேட்டவன், அடக்கவொடுக்கமாகிப், பணிந்துவிடுவான்.

அறியாமையால் சிலர் ஒத்துக்கொண்டுவிட்டார்கள், பயத்தினால் சிலர் பணிந்துவிட்டார்கள்.

அறியாமை, பயம் இரண்டின் மீதும் சொர்க்கமென்றும், நரகமென்றும் உலகங்கள் உண்டாக்கப்பட்டன.

புண்ணியத்தைச் செய்தவன் மேலேயிருக்கும் சொர்க்கத்துக்குப் போகிறான். பாபங்கள் செய்தவன் கீழேயிருக்கும் நரகத்துக்குப் போகிறான். எது புண்ணியம்? எது பாவம்? சொர்க்கம் எப்படியிருக்கும்? நரகம் எப்படிப் பட்டது? என்று விவரித்துக் கூறுகையில் ஒரு புராணத்துக்கும் மற்றொரு புராணத்துக்கும், ஒரு மதத்துக்கும் மற்றொரு மதத்துக்கும் வேறுபாடுகள் இருக்குமேயொழிய, பொதுப் படையாக புண்ணியத்தைச் செய்தால் சொர்க்கம், பாபத்தைச் செய்தால் நரகம் என்ற அடிப்படையில் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன.

அமைப்பின்படி—பிரபஞ்சம் இருக்கும் நிலையைக் கூறும்பொழுது, நாமிருக்கும் இந்த மண்ணுலகம் மத்தியிலிருக்கிறது. அதன்மேல், மேலுலகம்—சொர்க்க உலகம் இருக்கிறது. கீழ், கீழுலகம்—நரக உலகம் இருக்கிறது என்று பொதுவாக மதப் புராணங்கள் முதலில் நிர்ணயித்தன.

மேலுலகத்தில் முதலாவதாக ஆண்டவனுக்கு இடந்தரப்பட்டது. அண்டத்தைப் படைத்தவர், ஜீவராசிகளை உண்டாக்கியவர், எல்லாவற்றையும் பாதுகாப்பவர், மனிதனை உண்டாக்கியவர், அவனுக்கு எலும்பையும், சதையையும், உயிரையும், மூச்சையும், மனைவி மக்களையும், வீடு வாசல்களையும், மண்ணையும் விண்ணையும், சூரிய சந்திரர்களையும் எல்லாவற்றையும் உண்டாக்கித்தந்தவர் ஆண்டவரல்லவா! எனவே, நமக்கெல்லாம் மேலாயிருக்கிற மேலுலகத்தில் அவருக்கு உயர்ந்த இடம் இருந்தது. கடவுளின் சொற்படி நடக்கிறவர்கள், புண்ணிய காரியங்களைச் செய்து அவரது கிருபையைப் பெற்றவர்கள், அவரிருக்கிற மேலுலகம் செல்லுகிறார்கள்!

முதலில் மேலுலகம் ஒன்றாக யிருந்தது, அங்கே முழுமுதற் கடவுளாக ஒரே ஒரு ஆண்டவன் இருந்தார். இது புராணக்காரருக்கு அவ்வளவு சரியானதாகப்படவில்லை. மனிதன் மட்டும் மனைவி என்று ஒருத்தியுடன் கூடி இன்புற்றிருக்கும்பொழுது, கடவுள் மட்டும் ஏன் தனியாக இருந்து கஷ்டப்படவேண்டுமென்று தோன்றியது. உடனே கடவுள் தனக்குப் பக்கத்தில் ஒரு மனைவியைக் கொண்டார். அத்துடன் நிற்கவில்லை. பின் குடும்பம், மனிதனுக்கு இருப்பதுபோலவே, வளர ஆரம்பித்தது. கடவுளுக்குப் பிள்ளைகள் உண்டாயினர், பேரன் பேத்திகள், மாமன், மைத்துனன், உற்றார் உறவினர், என்று கணக்கிலடங்காதவாறு வளர ஆரம்பித்தது. பூலோகத்தில் ஒரு குடும்பமென்றால் பேரன், பேத்திகளென்று, குழந்தைகள் அதிகரித்தால், வயதான கிழவன், கிழவிகள் சிறிது காலத்துக்குப்பின் இறந்துவிடுவார்கள். பின் பேரன், பேத்தி வளர்ந்து, அவர்களுக்குப் பேரன்பேத்தி வரும்பொழுது, வயதாகி இறக்கும் தருவாயிலிருப்பார்கள். இவ்வாறு ஒருபுறத்தில் பிறப்பு என்று இருக்கும்பொழுது; மற்றொரு பக்கத்தில் இறப்பு வந்து உயிர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிடுகிறது. ஆனால் மேலுலகத்தில் ஆண்டவனும், அவருடைய பரம்பரையும், தேவர்களும் சாகாதவர்களாயிற்றே! எனவே புராணிகர் கணக்குப்படி, மேலுலகத்தில் இருக்கும் கடவுள்களின் தொகை வளர்ந்துகொண்டே வந்தது. ஒரு கடவுள் என்று புதிதாக வந்தால், உடனே அவருக்கு மனைவி மக்கள், பரிவாரம், பட்டினம் என்று பல வேண்டியிருந்தன. மேலுலகத்தில் இடநெருக்கடி உண்டாயிற்று. ஒரு முழுமுதற் கடவுள் இருந்ததுபோய், மூவராய் நால்வராய், முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளாய், கின்னரர் கிம்புருடராய், வித்தியாதரர்களாய், சித்தர்களாய், ஜீவன்முக்தர்களாய், யோகிகளாய், முனிபுங்கவர்களாய், சந்திர சூரியர்களாய், சப்தரிஷிகளாய், கிரகாதிபதிகளாய், இந்திரனாய், இந்திராணியாய், மேனகை, ரம்பை, ஊர்வசி, திலோத்தமைகளாய், கற்பகத்தருவாய், காமதேனுவாய் எண்ணிக்கை பெருக ஆரம்பித்தது! பார்த்தார் புராணிகர். இடநெருக்கடியைத் தீர்க்க ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு உலகம் என்று பிரித்தார். இந்திரலோகம், சந்திரலோகம், சூரியலோகம், பிரம்மலோகம், வைகுண்டம், கைலாசம் என்று வெவ்வேறு உலகங்கள் வளர்ந்தன.

ஒரு மனை நிலத்தில் ஒருவன் வீடுகட்டுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். வீட்டிலிருப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்தால், என்ன செய்வது? பக்கத்து நிலத்தையும் சேர்த்து, வீட்டைப் பெரிதாக்கவேண்டும். பக்கத்தில்

இடமில்லை யென்றால், வீட்டில் மேல்மாடி கட்டவேண்டும். புராணிகர் இரண்டாவது முறையைக் கையாண்டார். மேலுலகத்தில் இட நெருக்கடி உண்டானதும், உயரத்தில் ஒன்றன்மேலாக உலகங்களை அடுக்கி, பல கடவுள்களுக்கும், தேவர்களுக்கும் அவற்றைப் பிரித்துவிட்டார். புண்ணியங்களின் வகை, அவற்றைச் செய்வதின் அளவு, இவைகளைப் பொறுத்து, ஒவ்வொருவருக்கும் மேலேயுள்ள உலகங்களில், இந்திர உலகத்திலோ, வைகுண்ட வாசத்திலோ, கைலையங்கிரியிலோ எங்கோ ஒரு இடம் கிடைக்கும்.

மேலுலகங்கள் மட்டுமல்ல, கீழுலகங்களும் வளரத்தொடங்கின. புண்ணியங்களின் வகையைச்சொல்லி, கடவுள்களின் பெயரை வைத்து, மேலுலகங்கள் பிரிக்கப்பட்டதுபோல், கீழுலகங்களும் பிரிக்கப்பட்டன. நரகம் என்றால் ஒன்றல்ல; அவனவன் செய்கிற பாவத்துக்குத் தக்கபடி விதவிதமான நரகங்கள் உண்டாயின. நரகங்களை யல்லாமல், பாதாளங்கள் என்று கீழ் உலகங்கள் பல உண்டாயின.

மேலே சொர்க்கமும் அதன் பிரிவுகளும். கீழே நரகமும், அதன் வகைகளும். மத்தியில் மனிதர்கள் இருக்கும் பூவுலகம். இது மத ஏடுகளின்படி உலகங்களின் அமைப்பு—பிரபஞ்சத்தின் அமைப்பு ஆகும்.

“மனிதனாகப் பிறந்தவன், இந்த பூவுலகத்தை மட்டும் நம்பி வாழ்ந்துவிடக்கூடாது. இங்கேயிருக்கும் வாழ்வு சிறிது, இன்பம் அழியக் கூடியது; ஆனால் வேதங்கள் கூறுகிறபடி நடந்தால், மதக்குரு கட்டளைக்குப் படிந்தால், அதோ! அந்த மேலுலகத்தை அடையலாம்” என்று புராணிகர் விண்ணைக் காட்டினார்.

வேதாகம முறைப்படி நடக்காவிட்டால், மதக்குரு கூறும் புண்ணிய காரியங்களைச் செய்யாவிட்டால், என்ன நடக்கும்? “இந்த மண்ணுலகத்தில் இருப்பதைவிட அதிகமான துன்பங்கள், வேதனைகள் தரும் கீழேயிருக்கும் நரகத்துக்குப் போகவேண்டும்” என்று கீழே சுட்டிக்காண்பிக்கப்பட்டது.

சொர்க்கம்—நரகம் இரண்டுக்கும் மத்தியில் பூமி அகப்பட்டுக்கொண்டது. அழியாத இன்பத்தைத் தருவதாக மேலுலகம் அழைத்தது. மீறி நடந்தால், கிடைக்கும் துன்பங்களைக் காட்டி நரகம் பயமுறுத்தியது. ஆவல், பயம் இரண்டுக்குமிடையில் மனிதனின் உள்ளம் ஊசலாடியது.

மேலுலகம், கீழுலகம், இந்த உலகம் இவற்றையெல்லாம் படைத்தவரார்? முழுமுதற் கடவுள்தான்! இந்தப் பதிலைத்தர எல்லா மதங்களும் தயங்குவதில்லை. அந்தக் கடவுள், அவருடைய குணாதிசயங்கள் இவற்றைப்பற்றி விவரிக்கும் பொழுதுதான் ஒவ்வொரு மதமும் மாறுபாடடைகின்றன, ஒன்றோடொன்று முரண்படுகின்றன. சிவபுராணத்தைப் புரட்டினால், சிவசக்தி சங்கற்பத்தால், உலகங்கள் உண்டாயின என்று கூறும்; விஷ்ணு புராணத்தைப் பார்த்தால் சிருஷ்டி ஆரம்பம் விஷ்ணுதான் என்று சாதிக்கும். சிருஷ்டியின் விதமும் இருக்கு வேதத்தில் சொல்லியிருக்கிறபடி, யஜுர் வேதத்தில் இருக்காது. ஒரு நாட்டுக்குள், ஒரு மதத்தின் வேத ஏடுகளுக்குள் மாறுபாடு இருந்தால், ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் வேற்றுமை அதிகமிருக்கத்தான் செய்யும். உலகங்களின் சிருஷ்டி பற்றியும், அமைப்பு பற்றியும் கங்கை நதிக்கரையில் இருந்த வேதோத்தமர் கூறியதற்கும், யூபரடீஸ் நதிக்கரையிலிருந்த மதக்குரு எழுதியதற்கும் வேறுபாடு இருந்தது. எகிப்து நாட்டுப் பிரமிது மன்னர்கள் நம்பியதற்கும், கிரேக்க நாட்டு ஹோமர் பாடியதற்கும் மாறுதலிருந்தது. கிரேக்க நாட்டு மதவாதிகள் சொல்லியதை, கிருஸ்தவமத பைபிள் ஒத்துக்கொள்ளவில்லை. கிருஸ்தவ மத பைபிளில் விவரிக்கப்பட்ட பிரபஞ்ச அமைப்பை பின்னால் வந்த வானநூல் அறிஞர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. மதத்துக்கு மதம், வேதத்திற்கு வேதம் பிரபஞ்ச அமைப்பு மாறிக்கொண்டே வந்தது.

அண்ட சராசரங்கள் எப்படி உண்டாக்கப்பட்டன என்பதோடு, எப்படி இயங்குகின்றன என்பதுபற்றியும் வேத புராணங்கள் கூறவேண்டியிருந்தது. பகலில் சூரியன் எப்படி வருகிறது என்பதற்கு ஒரு புராணம் இருக்கும். ஒற்றைக்கால் தேரில், ஏழுகுதிரைகள் பூட்டி, பெரும் புறக்கடலிலிருந்து கிளம்பி, மேருவை வலம்செய்து, வருவதாகக் கூறும். அதேபோல் சந்திரன் வருவதற்கும், அது வளர்பிறை, தேய்பிறை ஆவதற்கும் கதைகள் இருக்கும். நட்சத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு புராணக்கதை உண்டு. மேலும் சந்திர சூரிய கிரகணங்கள் எப்படி உண்டாகின்றன என்பதிலிருந்து வான

வில் விழுவதுவரை புராணக்கதைகள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் ஏதாவது ஒரு காரணங்காட்டியாகவேண்டும் என்ற முயற்சியில், மதவாதிகள் கதைக்குமேல் கதையாகப், புராணத்திற்குமேல் புராணமாக அடுக்கிவிட்டார்கள்.

மத வேதங்களிலும், புராணக் கதைகளிலும் கூறப்பட்ட சிருஷ்டி அமைப்பில் பூமி தட்டையாகவும், நிலையானதாகவும் நாற்புறங்களிலும் கடல் தண்ணீர் சூழ்ந்திருப்பதாகவும் கூறப்பட்டிருக்கும். மேலும் சூரிய, சந்திரர்கள், நட்சத்திரங்கள் பதிக்கப்பெற்ற வானம் எல்லாம் பூமியைச் சுற்றிக் கிழக்கிலிருந்து மேற்காக வருவதாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கும். அறியாமை சூழ்ந்திருந்த காலத்தில், ஆராய்ச்சித் திறன் இல்லாத காலத்தில், இத்தகைய கருத்துகள்தாம் தோன்றக்கூடும். ஆனால் வேதபுராணங்கள் அந்த ஆரம்ப கருத்துக்களை அப்படியே வைக்காமல், கதைகாரணங்கள் உண்டாக்கி, ஆண்டவன் சிருஷ்டியில் ஒரு அம்சமாக ஆக்கிவிட்டன. இவ்வாறு கடவுளின் திட்டமென்றும், வேதவாக்கென்றும் சில கருத்துக்கள் தவறாக நிலைபெற்றபின், வேறு கருத்துக்களுக்கு இடமளிக்க மதவாதிகள் ஒருப்படவில்லை. வேதத்தில் சொல்லப்பட்டதற்கு மாறாக, உலக அமைப்புகளைப்பற்றி யாரேனும் கூற முன்வந்தால் அவர்களை அடக்கவும், தண்டிக்கவும், விரட்டவும், அழிக்கவும் தலைப்பட்டனர். ஆனால் புதிய கருத்துக்களை வெளியிட்டவர்களை அடக்கவும், அழிக்கவும் முடிந்ததேயன்றி, அவர்கள் வெளியிட்ட புதிய கருத்துக்களை அடக்கவும், மறுக்கவும், அழிக்கவும் அவ்வளவு சுலபத்தில் முடியவில்லை.

அண்ட சராசரங்களின் அமைப்பைப்பற்றி வேத புராணங்கள் தந்த விவரத்துக்கும், தற்கால விஞ்ஞான நூல்கள் தரும் விளக்கத்துக்கும் நீண்ட தொலைவுள்ளது. மாறுதல்கள் அதிகமானவை. கருத்தில் ஏற்பட்ட மாறுதல்களில் சில, காலப்போக்கில் யாரும் உணராதவாறு மெள்ள மெள்ள வந்துவிட்டன. சில கருத்துக்கள் மாபெரும் எதிர்ப்புகளுக்குப்பின், கடும் போராட்டங்களுக்குப்பின், தடைகளை மீறி, தண்டனைகளை மீறி, உடலை வருத்தும் இரும்பு விலங்குகளை ஏற்று, உயிரைக் குடிக்கும் நச்சுக்கோப்பைகளை ஏற்று, சிறைச்சாலைகளைத் தாண்டி, நெருப்புக்குண்டங்களில் குளித்து வெளிவந்தன. இந்தக் கருத்துக்களின் வளர்ச்சி நீண்டதொரு வரலாறாகும்.

விஞ்ஞானத்திற்கும், மதநம்பிக்கைக்கும் ஏற்பட்ட போராட்டம் முதலில் வானநூல் விளக்கங்களிலிருந்துதான் ஆரம்பித்தது என்னலாம். அண்டசராசரங்கள் எப்படி உண்டாயின? எப்படி இயங்குகின்றன? பூமி தட்டையா? உருண்டையா? பூமியைச் சுற்றி சூரியன் இருக்கிறதா? அல்லது சூரியனைச்சுற்றி பூமி வருகிறதா? என்பனபோன்ற சிறு கேள்விகள்தாம், அவைக்குக் காணப்பட்ட விடைகள்தாம் விஞ்ஞானத்திற்கும், மதத்திற்கும் முதல் மோதலை உண்டாக்கியது. புதிய கருத்துக்கள் வளரவளர, பழைய நம்பிக்கைகள் பலமற்றுப் போனதுடன், அந்தப் பழைய நம்பிக்கைகளின்மீது கட்டப்பட்டிருந்த மூடக்கொள்கைகள், பக்தி மார்க்கங்கள், வேதபுராணங்கள், கற்பனைக் கதைகள், இவற்றைக் காட்டி குருமார்கள் நடத்திவந்த அதிகாரம் எல்லாம் சரியலாயின. இதனால்தான் புதிய கருத்துகள் வெளிவந்தபோது மதத்தலைவர்கள் கட்டுப்பாடுடன் மிகக் கடுமையாகத் தங்கள் எதிர்ப்பை வீசினார்கள்.

அண்ட சராசரங்கள், சூரிய சந்திர கிரகாதிகள், பிரபஞ்ச அமைப்பு, இவைகளைப்பற்றி ஏற்பட்ட கருத்து வளர்ச்சியைக் கவனிக்கும் முன், வேதபுராணங்களில் கூறப்பட்டு, மக்கள் மனதில் நீண்டகாலமாக நிலைபெற்றுவந்த கருத்துக்களைப்பற்றி முதலில் அறிந்தால்தான், புதிய கருத்துக்கள் வெளிவந்தபோது அவற்றுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்குக் காரணமும், புதிய கருத்துக்களை விளக்கி, அறிவொளி பரப்ப வந்தவர்களை மதவாதிகள் அடக்கிவிட முயன்றதின் அவசியமும் தெரியும்.

(தொடரும்)

அடுத்த இதழில்

அண்டங்களின் அமைப்பு இந்து மதத்தின் வேத புராணங்களின்படி எப்படியிருந்தது என்பது, உரிய படங்களுடன் விளக்கப்படும்.

வினாவும் விளக்கமும்

ஆந்திரம் தனி மாநிலமாகப் பிரிந்துவிட்ட பிறகு 'திராவிடநாடு' பிரிவினைபற்றிப் பேசுவது பொருந்துமா?

திராவிடநாடு பிரிவினைபற்றி நாம் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லிவரும் அடிப்படை விளக்கத்தைத், தெளிவாக உணரும் திறன் படைத்தோர், இத்தகைய ஐயவினாவை ஒருக்காலும் எழுப்பார்.

மொழிவழி பிரியும் தமிழகமும், ஆந்திரமும், கருநாடகமும், கேரளமும் தனித்தனி மாநிலங்களாக நின்று, குறைந்த அளவு திட்ட அடிப்படையில், ஒரு கூட்டு அமைப்பாக அமைவதே திராவிடநாடு என்பதைப், பல்காலும் வற்புறுத்திச் சொல்லிவந்துள்ளோம். இப்பொழுதுள்ள மாநில எல்லைக்கோடுகளெல்லாம் வெள்ளையர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ற முறையிலும், அவர்களின் அதிகார ஆதிக்கத்திற்கேற்ற வகையிலும் அவர்களால் வகுக்கப்பட்டனவாகும். திராவிடத்தைப் பொறுத்த வரையில், அது தனி நாடாகப் பிரிந்தபிறகு, வெள்ளையர்களால் வகுக்கப்பட்ட பொருத்தமற்ற மாநில எல்லைக் கோடுகள் அழிக்கப்பட்டு, மொழிவழி மாநில எல்லைக்கோடுகளாக அவை திருத்தி அமைக்கப்படவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். அதன்படி இப்பொழுதுள்ள சென்னை, திருவிதாங்கூர்-கொச்சி, மைசூர், ஆந்திரம், ஹைதராபாத், பம்பாய், ஒரிஸா முதலிய மாநிலங்களின் எல்லைக் கோடுகள் அழிக்கப்பட்டுத், தமிழ் மொழி வழங்கும் தொடர்ந்தாற்போல் உள்ள பகுதி தமிழகமாகவும், அதுபோலவே தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் வழங்கும் பகுதிகள் முறையே ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களாகவும் மாறவேண்டும் என்பதாகும். இந்த நிலையில் இப்பொழுது ஆந்திரம் தனி மாநிலமாக உருவாகிறது என்றால், அது திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கைக்கு முரண்பட்டதொன்றல்ல. ஒத்தக் கருத்தின் அடிப்படையில் மலர்வதேயாகும்; செய்யப்பட எண்ணியிருக்கும் செயல் முன்கூட்டி நடைபெறுகிறது என்று பொருள். ஆந்திரம் தனி மாநிலம் ஆகிறது என்றால் திராவிட நாடு பிரிந்த பிறகும் தனி மாநிலமாக அமையவேண்டிய ஆந்திரம், முன்கூட்டியே அதற்கான சூழ்நிலையை உருவாக்கிக்கொள்கிறது என்று பொருள்.

திராவிடநாடு பிரிவதற்கு முன்பே ஐக்கியத் தமிழகமும், விசால ஆந்திரமும், சம்யுக்த கருநாடகமும், ஐக்கிய கேரளமும் தனித்தனி மாநிலங்களாக உருவாகிவிட்டால், அது வாழ்த்தி வரவேற்கப்படவேண்டிய செயலேயாகும். அப்படிப் பிரிந்த திராவிடப் பகுதிகள் நான்கும் மொழிவழி, மொழி ஆட்சிவழி, மொழிப்பயிற்சி வழி, மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்கள் வழித் தனித்தனியாக நின்று, வடநாட்டு ஆதிக்க எதிர்ப்புவழி, வடநாட்டுச் சுரண்டல் தடுப்புவழி, பாதுகாப்பு வழி, வெளிநாட்டு விவகாரவழி, நாணயச் செலவாணி வழி, போக்குவரத்துச் சாதனவழி, வாணிக வழி ஒன்றுபட்ட ஒரே கூட்டாட்சியில் அமையும்படியான திராவிட நாட்டைத்தான், திராவிட முன்னேற்றக் கழகம் கோரி நிற்கிறது. எனவே ஆந்திரம் தனி மாநிலமாகப் பிரிவது 'திராவிட நாடு' பிரிவினைக்கு முரண்பட்டதல்ல; பொருந்தி வரக்கூடியதேயாகும்.

திராவிட நாட்டில் எது பொதுமொழியாக இருக்கும்?

திராவிடநாட்டில் தமிழகத்தில் தமிழும், ஆந்திராவில் தெலுங்கும், கருநாடகத்தில் கன்னடமும், கேரளத்தில் மலையாளமும் ஆட்சி மொழிகளாக இருந்துவரும். இந்த நான்கு மாநிலங்களும் இணைய, அமையும் திராவிடக் கூட்டாட்சி, எந்த மொழியைப் பொதுமொழியாகக் கொள்வது என்பதை, திராவிடம் பிரிந்த பின் கூடும் திராவிடக் கூட்டாட்சி அரசியல் அமைப்பு அவை முடிவுசெய்யும். திராவிடக் குழு மொழியினர் நான்கு வகையினரும், உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தைத் தாய் மொழிக்கு அடுத்த இன்றியமையாத மொழியாகக் கற்றுத் தீரவேண்டிய நிலைமை எவ்வகையிலும் ஏற்படுவதால், உலகப் பொதுமொழியாக இருந்துவரும் ஆங்கிலம், திராவிடத்திற்கும் பொதுமொழியாக அமையுமேயானால், அதில் வியப்பிருக்க இயலாது. ஆங்கிலமே பொதுமொழியாக அமைவதில் தவறில்லை. திராவிட நாட்டினர் தங்கள் தாய்மொழியோடு கற்றுக்கொள்ளும் ஆங்கிலம் உலகத்தோடு தொடர்பு கொள்ளவும் பயன்படும், மற்ற திராவிடப் பகுதிகளோடு தொடர்பு கொள்ளவும் பயன்படும்.

தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.



D. B. காலர் பிளவுஸ்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

காலர் விளக்கம்

H-ல் இருந்து 4 வரை $1\frac{3}{4}$ அங்.
(4, 5 இணைப்பு)
C-ல் இருந்து 5 வரை $1\frac{3}{4}$,,
(H, C இணைப்பு)
A-ல் இருந்து 21 வரை 2 ,,
(21, 27 இணைப்பு)
B-ல் இருந்து A வரை $3\frac{1}{2}$,,
(B, 27 இணைப்பு)
K-ல் இருந்து A வரை $1\frac{3}{4}$,,
E-ல் இருந்து 21 வரை $1\frac{3}{4}$,,

பாடியை வெட்டிய பிறகு காலர் வெட்டி எடுக்கவும், காலர் பாடியின்மீது படியவைத்தா, அல்லது உள் துணி கொடுத்து திருப்பி பாடியின்மீது ஆடவிட்டும் தைக்கலாம்.

முன் பக்கம் திறப்புக்கு (ஒப்பன்) 3 அங் உள் துணி திருப்பி (பாசன்) தைக்கவும். காஜா



இரா. செழியன் எழுதும்

புதிய தொடர்கதை

1-8-54 முதல்

ஆரம்பமாகிறது.

'மன்றம்' வளர்ச்சி நிதி

வீரபத்திரன், பாண்டமங்கலம்	2	0	0
தி. மு. க. கீரம்பூர்	20	0	0
பொதுக்கூட்டம், கூப்பாச்சிக் கோட்டை	1	8	0
குழந்தை பூங்கொடி, மோளையானூர்	1	0	0
,, இளங்கோ, ,,	1	0	0
மலேயா நண்பர்	7	13	0

நிதி உதவியோர் அனைவர்க்கும் நன்றி!

(ஆ-ர்.)

பட்டன் அமைப்பதற்கும், முன் பக்கம் பட்டிகள் ஒன்றின்மேல் ஒன்று வளர்ந்து இருப்பதற்கும்.

பட்டன் அளவுகள்

27-ல் இருந்து பட்டன் மார்க்குவரை 4 அங்
28-ல் இருந்து பட்டன் மார்க்குவரை 4 அங்
29-ல் இருந்து பட்டன் மார்க்குவரை 4 அங்

பின் பக்கம், 2, 13-க்கும் மத்தியில் $\frac{1}{2}$ அங். அகலம், $6\frac{1}{2}$ அங். நீளம், இரண்டு டார்ட்டு அமைக்கவும்.

முன்பக்கம், 20, 16-க்கும் மத்தியில் $\frac{3}{4}$ அங். அகலம், $7\frac{1}{2}$ அங். நீளம். இரண்டு டார்ட்டு அமைக்கவும்.

விளக்கப்படத்தின் வடிவம்போன்று அமைந்துள்ளனவா என்று ஒத்திட்டுப் பார்த்து வெட்டவும்.

ஏ. மயன் 160

Regd. No. M 6296 MANRAM

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.
எழுதியவை

கண்ணீரும் செந்நீரும்
வளர்த்த சமூகம் 0—12—0
மறைந்த திராவிடம் 0— 3—0

இரா. செழியன் M. A.
எழுதியவை

ராஜாடி ராஜா 0—12—0
பொது அறிவு 0— 8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. வி. பி. மூலம் அனுப்ப அதன் கட்டணம் தனி.

விபரங்கட்கு :

நிர்வாகி, **மன்றம் பதிப்பகம்,**
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

மன்றம்

மலர் - 2
1953 - 54

24 இதழ்கள்கொண்டது
அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட
வால்யூம் விலை ரூ. 8-0-0

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப் படாமல் அனுப்ப ரூ. 6-12-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணு விதம் தபால்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

விபரங்கட்கு :

நிர்வாகி, **மன்றம்,**
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

சந்தாதாரர்களுக்கு

சந்தா அனுப்பும் தோழர்கள் தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

சந்தா முடிவதற்குமுன் முடிவுபற்றி சந்தாதாரர்களுக்கு தெரிவித்துவருகிறோம். குறித்த நாளில் சந்தா புதுப்பிக்கப்படாவிட்டால் இதழ் வி. பி. மூலம் அனுப்பிவைக்கப்பெறும். சந்தாவைப் புதுப்பிக்க விருப்பமில்லாதோர் அது பற்றி முன்கூட்டியே அறிவித்துவிட வேண்டுகிறோம்.

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும் போதும் பணம் அனுப்பும்போதும் தங்கள் சந்தா எண்ணையும் குறிக்க வேண்டும்.

நிர்வாகி, "மன்றம்"

விற்பனையாளர்க்கு

"மன்றம்" விற்பனையாளர்களில், உடனுக்குடன் பட்டியல் தொகையை அனுப்பிவைக்காமல் காலந்தாழ்த்தியும், அதிக நிலுவை நிறுத்திவைத்தும் தொல்லை கொடுப்பவர்களின் செயல் மிக வருந்தத்தக்கதாக இருக்கிறது. அவர்கள், கடமையையும் நாணயத்தையும் காப்பாற்றுவது அவர்களுக்கும் எமக்கும் நலம் பயப்பதாகும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறோம். ஒழுங்காகத் தொகை அனுப்பிவரும் விற்பனையாளர்க்கு எமது நன்றி.

பாக்கி நிறுத்தி வைத்திருக்கும் விற்பனையாளருக்கு இதழ்கள் கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி, "மன்றம்"

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.
MANRAM ... CHAKAM ... 26, Nainiappan St. Mannadi, MADRAS-1